



# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

**1879 -1916** ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 6 இதழ் - 6 நவம்பர்-டிசம்பர் 2020

**R5198**

## THE SALE OF A BIRTH RIGHT

## சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போடுதல்

*''ஆதியாகமம் 27:22-34*

*''ஒருவனும் .... ஒரு வேளை போஜனத்திற்காக தன் சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப் போட்ட ஏசாவைப் போல சீர் கெட்டவனாக இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தை விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்.'' எபிரேயர் 12:16,17.*

பழங்காலங்களிலும் இப்பொழுது சில நாடுகளிலும் சேஷ்ட புத்திர பாகம் மூத்த மகனுக்கு உரியதாக இருந்தது. தகப்பனாரின் மரணத்திற்கு பிறகு, மூத்தமகன் குடும்பத்தின் தலைமை பொறுப்பை எடுத்துக் கொள்வான். குடும்பத்தின் சொத்து, வழக்கமாக ஆடு, மாடுகள் அவனது சொந்தமாகும். இன்றைய பாடம் பூமிக்குரியவைகளைக் காட்டிலும் மேலான சேஷ்ட புத்திர உரிமையைப் பற்றி கூறுகிறது. அது குறிப்பிட்ட மாபெரும் தெய்வீக வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்வதை உள்ளடக்கியது.

ஆபிரகாமின் சொத்துரிமை ஈசாக்குக்குச் சென்றது. குடும்பத்தின் மற்றவர்கள் சில வெகுமதிகளை மட்டும் அவரிடமிருந்து பெற்றார்கள். ஆபிரகாம் பெரும் பணக்காரனாக இருந்தார். அவரது பூமிக்குரிய சொத்துக்களைக் காட்டிலும் அவரோடு செய்யப்பட்ட தெய்வீக வாக்குத்தத்தம் அல்லது உடன்படிக்கையை அவர் அதிக மதிப்புள்ளதாக கருதினார். அந்த உடன்படிக்கையாவது: கர்த்தருடைய ஆசீர்வாதம் அவரது வித்தின்மேல், அவரது சந்ததியின் மேல் இருக்கும். முடிவாக அவரது சந்ததி மூலமாக பூமியின் சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும், அவர்கள் மூலமாகவே தேவ கிருபையை பெறுவார்கள் என்பதாகும்.

இந்த மாபெரும் வாக்குத்தத்தத்தை ஈசாக்கு சுதந்தரித்துக் கொண்டிருந்தார். நம்முடைய பாடத்தின் காலத்தில் ஈசாக்கின் வயது நூறுக்கு மேலாகவும் கண் பார்வை இல்லாமலும் இருந்தார். தனது ஆசீர்வாதங்களை தனது வாரிசுக்கு கொடுக்க வேண்டிய நேரம் வந்தது என்பதை உணர்ந்தார். அது இந்த காலத்தில் உள்ளது போல் எழுதப்பட்ட உயில் போல் அல்ல. ஆகையால் வேட்டைக்காரனாக இருந்த தனது மகன் ஏசாவை அழைத்து, தனக்காக மானை வேட்டையாடி அதை ருசியுள்ள பதார்த்தமாக சமைத்து தனக்கு கொண்டு வரும்படி சொன்னார். இப்படியாக ஏசாவை ஆசீர்வதிப்பதாகக் கூறினார்.

ஈசாக்கு ஏசா, யாக்கோபு என்ற இரட்டையர்களை மகன்களாக பெற்றிருந்தார். ஏசா சில நிமிடங்களுக்கு மூத்தவன். சாதாரணமாக இரட்டையர்கள் ஒரே மாதிரி இருப்பார்கள், ஆனால் இவர்கள் இருவரும் மிகவும் மாறுபட்டு இருந்தனர். ஏசா சர்வாங்கமும் ரோம அங்கி போர்த்தியவன் போலவும், வன சஞ்சாரியும் வேட்டைக்காரனுமாய் இருந்தான். யாக்கோபு இதற்கு மாறாக, வழவழப்பான தோலும் குணசாலியும் கூடாரவாசியுமாய் இருந்தான். யாக்கோபு தனது தகப்பனாரின் குணத்தை சுதந்தரித்துக் கொண்டவனாக இருந்தான். ஏசா தாயைப் போல மிகவும் சுறுசுறுப்பானவனாக இருந்தான். எதிர்பண்பு உடையவர்கள் ஈர்க்கப்படுவது போல ஈசாக்கு ஏசாவையும், தாய் ரெபேக்காள் யாக்கோபையும் நேசித்தார்கள்.

சாந்தமும் கவனமும் உள்ளவனான யாக்கோபு, தனது தாத்தா ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த மாபெரும் ஆசீர்வாதத்தைக் குறித்தும், சில நிமிடங்கள் காலதாமதமாக பிறந்ததினால் அந்த ஆசீர்வாதத்தை இழந்து விட்டோமே என்றும் அடிக்கடி சிந்தித்தான். எந்த அளவுக்கு அதை ஆராய்ந்தானோ, அந்த அளவுக்கு அந்த மாபெரும் வாக்குத்தத்தங்களின் மதிப்பை உணர்ந்தான். ஆனால் அதற்கு மாறாக ஏசா முழுவதும் மிருக ஆவி உடையவனாக இருந்து, தற்கால சந்தோஷத்தை அதிகம் விரும்பினான்; தெய்வீக வாக்குத்தத்தத்தை இரண்டாம் பட்சமாக, கற்பனையானதாக கருதினான்.

இந்த இரு மனிதர்களும் முப்பது வயதை கடந்தார்கள். ஆனால் என்ன வயது என்பதை நாம் அறியோம். ஏசா தனது தந்தையின் சொத்தை சுதந்தரித்துக் கொள்ள எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். யாக்கோபு தனது துரதிருஷ்டமான பிறப்பினால் தாழ்த்தப்பட்டு, மனந்தளர்ந்திருந்தான். அவன் தனக்காக விரும்பி பயற்றங்கூழை சமைத்துக் கொண்டிருந்தான். அவன் அதை சாப்பிட போகும்போது ஏசா வந்து, தான் அலைந்து இளைத்திருப்பதாகவும் கூழில் கொஞ்சம் தரும்படியும் கேட்டான்.

அதற்கு யாக்கோபு ஏசாவிடம், ''உனக்கு எல்லா அனுகூலமும் இருக்கிறது; எனக்கு இந்த கூழைத் தவிர எதுவுமில்லை. உனக்கு விருப்பமிருந்தால் நீ கூழை எடுத்துக் கொள், நான் அனுகூலத்தை எடுத்துக் கொள்வேன்'' என்று கூறினான். அதற்கு ஏசா, ''நான் சாகப்போகிறேன், எனக்கு கூழைக்கொடு'' என்றான். யாக்கோபு உனது சேஷ்ட புத்திரபாகத்தை எனக்கு கொடுத்தால், இந்த கூழை உனக்கு தருவேன். இப்படியாக முடித்துக் கொள்ளலாம் என்று கூறினான். அஜாக்கிரதையான ஏசா கூழுக்காக, ஆணையிட்டு தன் சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போட்டான். அவன் தேவன் பேரிலோ அல்லது அவரது வாக்குத்தத்தங்கள் பேரிலோ அவனுக்கு குறிப்பிட்ட விசுவாசம் இல்லை என்பதை இது காண்பித்தது.

காலங்கள் சென்றன. ஏசா நாற்பது வயதான போது புறஜாதி பெண்களை திருமணம் செய்து கொண்டான். அப்பொழுது அவனது தகப்பன் ஈசாக்கு நூறு வயதுடையவராக இருந்தார். கொஞ்ச காலத்திற்கு பிறகு இந்த முடிவு வந்தது. அதை வாங்கினவனுக்கு ஆசீர்வாதமும் மிகவும் மனப்பூர்வமாக அதை விற்றவனுக்கு ஏமாற்றமும் கோபமும் வந்து சேர்ந்தது.

ஈசாக்கு, ஏசாவுக்கு சொன்னதை தாயாகிய ரெபேக்காள் கேட்டாள். அவள், தனக்கு பிரியமான மகன் யாக்கோபுக்கு சேஷ்ட புத்திர பாகம் விற்றுப்போடப்பட்டதை நினைவு கூர்ந்தாள். அவள் நிலைமையை யாக்கோபிடம் எடுத்துக் கூறி, அவனது சகோதரன் ஏசாவைப் போல சென்று ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வது சரியானது என்று கூறினாள். அவள் ஈசாக்குக்கு பிடித்தமான மாமிச உணவை தயார் செய்து, தன் மூத்த மகனாகிய ஏசாவின் நல்ல வஸ்திரங்களை உடுத்தி, ஆட்டுக்குட்டியின் தோலை ரோமமில்லாத அவனது கழுத்திலும் கைகளிலேயும் போட்டு, இப்படியாக அவனை ஏசா என்று தகப்பன் நினைக்கும்படியாக அனுப்பினாள். ஏசாவின் அனைத்து உரிமைகளையும் யாக்கோபு வாங்கிவிட்டதால் இது தவறில்லை என்று நினைத்தாள். இது கண்டுபிடிக்கப்பட்டால் அதன் சாபமெல்லாம் என் மேல் சுமரட்டும் என்று கூறினாள். அதன் முழு பொறுப்பையும் அவள் எடுத்துக் கொண்டாள். யாக்கோபு அதன்படி காரியங்களை நடப்பித்து பிரதான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டான்.

பிறகு ஏசா மான் கறி உணவுடன் வந்து தனது ஆணையுடன் செய்த உடன்படிக்கையை மீறுவதற்கு தயாரானான். ஆசீர்வாதங்கள் சென்றுவிட்டன என்று அறிந்து மிகவும் ஏமாற்றம் அடைந்தான். அவன் விற்றபோது இருந்ததைக் காட்டிலும் அது அப்பொழுது மிகவும் உயர்ந்தாக, மதிப்பு மிகுந்ததாக காணப்பட்டது. அவன் கீழான சில ஆசீர்வாதங்களை தகப்பனிடமிருந்து பெற்றாலும், சேஷ்ட புத்திர பாகத்தை விற்ற நிகழ்வின் நிபந்தனைகளை நிறைவேற்றின தனது சகோதரனை கொலை செய்யும் எண்ணங் கொண்டான்.

### பூமிக்குரிய இழப்பு ஆவிக்குரிய இலாபம்

சேஷ்ட புத்திர பாகத்தின் மேல் உள்ள யாக்கோபின் அக்கறை பூமிக்குரிய சுதந்தரம் அல்ல, ஆனால் அவன் தொடர்புடைய ஆவிக்குரிய வாக்குத்தத்தம் என்று இந்த வர்ணனை காண்பிக்கிறது. அவன் தனது வீட்டையும், தான் வாரிசாயிருந்த அனைத்து சொத்துக்களையும் விட்டு, கையில் காசு எதுவும் இல்லாமல் தனது மாமாவிடம் வேலைக்குச் சென்றான். ஏசா பூமிக்குரிய அனைத்து சொத்துக்களையும் பெற்றிருந்திருப்பான். யாக்கோபு எங்கே சென்றாலும் ஆபிரகாமுக்கு செய்யப்பட்ட வாக்குத்தத்தின் சேஷ்ட புத்திர பாகத்தின் சலுகையை எடுத்துச் சென்றார். அதை அவரிடமிருந்து பிரிக்கக் கூடாதிருந்தது. இதன் மூலம் அவர் ஐசுவரியவானாக இருந்தார்.

இந்த விளைவுகள் எல்லாம் தேவனால் முன்னரே அறியப்பட்டிருந்தது என்ற உண்மையை பரிசுத்த பவுல் நமது கவனத்திற்கு கொண்டு வருகிறார். அதாவது அந்த இரட்டையர்களின் பிறப்பிலேயே மூத்தவன் இளையவனுக்கு ஊழியம் செய்வான் என்று விசேஷமாக அறிவிக்கப்பட்டிருந்தது. (ரோமர் 9:10–13) தெய்வீக தீர்க்கதரிசனத்துக்கு மாறாக, மூத்தமகன் ஏசாவுக்கு ஆசீர்வாதத்தை கொடுக்கத் தூண்டிய ஈசாக்கின் அன்பை எதிர்க்கவும் தடுக்கவும் இந்த தெய்வீக தீர்க்கதரிசனமே ரெபேக்காளை வழிநடத்தியது என்பதில் சந்தேகமில்லை. (ஆதியாகமம் 25:23)

### யாக்கோபு நேசிக்கப்பட்டான், ஏசா வெறுக்கப்பட்டான்

ஈசாக்கை ஏமாற்றிய யாக்கோபு மற்றும் அவனது தாயாரை ஆதரிப்பது நமது வேலையல்ல. அவரது மார்க்கத்தை வேறு யாரையாவது கடைப்பிடிக்கச் சொல்வதும் நமக்குரியதல்ல. எனினும் தேவனுடைய அன்பு யாக்கோபு மேல் இருந்தது என்று வேதாகமமானது நமக்கு தெளிவாக சொல்லுகிறது என்பதை நாம் கவனிப்பது சரியானதாக இருக்கும். ''யாக்கோபை நான் நேசித்தேன்.'' அவன் ஆணையிட்டுக் கொடுத்த மாபெரும் வாக்குத்தத்தத்தின் பேரிலும் தேவன் பேரிலும் அவன் வைத்த அன்பினிமித்தம் அவன் நேசிக்கப்பட்டான்.

இந்த காரியத்தைக் குறித்து யாக்கோபை கண்டனம் செய்து வேதத்தில் எங்கேயும் ஒரு வார்த்தை கூட சொல்லப்படவில்லை. தேவனுடைய வசனத்தில் எழுதப்பட்டுள்ளதைக் காட்டிலும் ஞானமாக இருக்கக் கூடிய உரிமை கர்த்தரின் நாமத்தில் எந்த போதகருக்கும் இல்லை. மாறாக, ஏசா ஒரு வேளை கூழுக்காக தனது சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போட்டதினால் கடுமையாக கண்டிக்கப்பட்டு, பயபக்தியற்றவனாகவும் தீயவனாகவும் அழைக்கப்பட்டான். சேஷ்ட புத்திர பாகத்தின் மேல் யாக்கோபின் ஆசை நம்முடைய முயற்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. நம்மில் யாராவது தங்கள் சேஷ்ட புத்திர பாகத்தில் அக்கரை இல்லாது இருந்தால், நாம் அதை இழப்பது மாத்திரமல்ல, தேவ கிருபையையும் இழந்து விடுவோம் என்பதை எச்சரிக்கை பண்ணும்படியாக ஏசாவின் அக்கறையின்மை வைக்கப்பட்டிருக்கிறது. (எபிரேயர் 12:15–17)

### சேஷ்ட புத்திர பாகத்தை இழத்தலின் மூலம் பாடம்

நீண்ட காலத்திற்கு முன்பதாக இந்த இரண்டு மனிதர்களின் அனுபவங்கள் கர்த்தரால் ஒரு நிழலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்ற உண்மைக்கு நமது கவனத்தை அப்போஸ்தலர் அழைக்கிறார். ஏசாவின் ஆசீர்வாதத்தினால் குறிப்பிடப்பட்ட ஒரு ஆசீர்வாதத்தை ஆபிரகாமின் மாம்சீக வித்து சுதந்தரித்துக் கொள்வார்கள். யாக்கோபின் சுதந்தரத்தினால் நிழலாக காண்பிக்கப்பட்டபடி ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்து மாபெரும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுவார்கள். பூமிக்குரிய வித்து பூமிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளும். ஆவிக்குரிய வித்து பூமிக்குரிய உரிமைகளை விட்டுக் கொடுத்து, சுபாவ மனிதன் அக்கறை கொள்ளாத ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களை பெறுவார்கள்.

இது மாம்சீக இஸ்ரயேலருக்கு மாத்திரமல்ல, மேசியாவின் இராஜ்யத்தில் கிறிஸ்துவின் உடன் சுதந்தரராகக் கூடிய சலுகைகளையும் சந்தர்ப்பங்களையும் பெற்ற பிறகு இந்த உலகின் சந்தோஷங்களை விரும்புகிறவர்களுக்கும் பொருந்தும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். இவைகள் ஆவிக்குரிய சேஷ்ட புத்திர பாகத்தை பூமிக்குரிய சலுகைகளுக்காக, ஒரு வேளை கூழுக்காக விற்றுப்போடுவதை குறிக்கின்றன. சர்வவல்லவரால் இன்னும் வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதம், ஒரே ஆசீர்வாதம் ஆபிரகாமின் வாக்குத்தத்தம் மட்டுமே. மேசியாதான் ஆபிரகாமின் வித்து. அவர் மூலமாகத்தான் தேவனுடைய

அனைத்து ஆசீர்வாதங்களும் வர வேண்டும். இயேசுதான் தலை, சபைதான் சரீர அங்கங்கள். இதைப் பற்றி பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: நீங்கள் "கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." (கலாத்தியர் 3:29)

இந்த ஆவிக்குரிய வித்தை அமைக்கும்படியான சந்தர்ப்பம் முதலாவது யூதருக்கு வந்தது. ஆனால் பெரும்பாலானவர்கள் தற்கால வாழ்கைக்குரியவைகளை விரும்பி நம்பினார்கள். சிலர் மட்டுமே இயேசுவை சிநேகித்து, நம்பி, அவரது சீடர்களாயினர். இந்த "பரம அழைப்புக்கான" கதவு புற ஜாதிகளுக்கு திறந்து விடப்பட்ட போது, பலனானது அதே போலவே இருந்தது. பெரும்பாலானோர் தற்கால வாழ்க்கையை விரும்பினர். இன்னும் காணப்படாமல் இருக்கிறவைகளை சிலர் மட்டுமே உணர்ந்திருக்கின்றனர்.

தற்கால உலகத்தை நேசிக்கிறவர்களுக்கு பூமிக்குரிய சலுகைகளை அர்ப்பணித்ததனால் அவைகளை இழந்து, சுய பலியினால் சேஷ்ட புத்திர பாகத்தை பெற்றுக் கொண்ட சில பரிசுத்தவான்கள் யாக்கோபினால் குறிப்பிடப்படுகின்றனர். இது மற்றவர்களுக்கு பூமிக்குரிய தற்கால நன்மைகளை ஒரு வேளை போஜனத்தை பெறுவதாகவும், மாபெரும் பரிசை இழப்பதாகவும் இருக்கிறது. இது நமக்குண்டான எல்லாவற்றையும் விற்று நாம் வாங்க வேண்டும் என்று இயேசு விரும்பின ஒரு விலையுர்ந்த முத்தாக இருக்கிறது. அதாவது சீக்கிரத்தில் உலகத்தையும் இஸ்ரயேலரையும் ஆசீர்வதிக்கப் போகிற மேசியாவின் ராஜ்யத்தில் ஒரு பங்கை பெறுகிறதை குறிக்கிறது.

ஒரு மனுஷன் சேஷ்ட புத்திரபாகத்தை பெற்றிருந்தால் மட்டுமே அதை விற்க முடியும். ஆகையால் இது தேவனுடைய அர்ப்பணம் செய்த ஜனங்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாக இருக்கிறது. பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் மட்டுமே உயர்வான சேஷ்ட புத்திர பாகத்தை பெற்றிருக்கிறார்கள். இவர்கள் மட்டும் தான் ஒரு வேளை போஜனத்திற்காக அதை விற்க முடியும். உலகத்தார் பல்வேறு பரிசுகளையும் முத்துக்களை பெறுவதற்கு கஷ்டப்பட்டு முயற்சிக்கிறார்கள். அது அவர்களுக்கு நியாயமானதாக இருக்கிறது. ஏனெனில் அவர்களுக்கு வேறு எதுவும் இல்லை.

கர்த்தருக்கும் நீதி மற்றும் இரக்கம் ஆகியவற்றிற்கும் உண்மையாய் இருப்போம் என்று உறுதியளித்தவர்களே தெய்வீக வாக்குத்தத்தத்தின் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட சுதந்தரரானார்கள். இவர்கள் தொடர்ந்து சுய பலி செலுத்தி ஆண்டவரின் அடிச்சுவடுகளை பின்பற்ற வேண்டும். இல்லையென்றால் மகிமையான பலன்களில் அவர்கள் பங்குபெற இயலாது. ராஜ்யத்தில் ஒரு பங்கை அடைகிறவர்கள் மட்டுமே, மனுக்குலத்தை உயர்த்தி ஆசீர்வதிக்கிற ஆச்சரியமான வேலையில் பங்குபெற முடியும். ஆகையால் அப்போஸ்தலர் கூறுவதுபோல, நம்மை சூழ்ந்து கொண்டிருக்கிற பாரமான யாவற்றையும், நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். (எபிரேயர் 12:1–3)

**R5199**

## The Gate of Heaven
## வானத்தின் வாசல்

ஆதியாகமம் 28:10–22

*"நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காப்பேன்." (ஆதியாகமம் 28:15)*

நமது பாடம் முற்பிதாவாகிய யாக்கோபைப் பற்றியது. அவர் தாம் வாங்கிய சேஷ்டபுத்திர பாகத்தை சேர்ந்த குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் கைவிட்டு வீட்டை விட்டு போகும்போது அவருக்கு வயது நாற்பது இருக்கும். அவர் வாரிசுதாரராகிய ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தைக் காட்டிலும் பூமிக்குரிய சொத்துக்களை முக்கியத்துவம் வாய்ந்ததாக அவர் நினைக்கவில்லை. அவரது சகோதரன் ஏசா ஆவிக்குரிய வாக்குத்தத்தத்தைப் பற்றி அக்கரை கொள்ளாமல், ஈசாக்கின் பூமிக்குரிய சுதந்தரங்களிலேயே முழுமையாக திருப்தி அடைந்தான். இது வரக்கூடிய பாடங்களில் வெளிப்படுத்தப்படுகிறது.

யாக்கோபு ஆரானுக்கு போகும்போது, லூஸ் என்ற சிறிய பட்டணத்தில் தங்கினார். பாலஸ்தீனியர்கள், இப்பொழுது செய்வது போல, தங்கும் விடுதிக்கு போகாமல், தலையணைக்கு ஒரு கல்லை வைத்துக் கொண்டு, மேலாடையை உடம்பில் சுற்றிக் கொண்டு ஒரு அமைதியான இடத்தில் தூங்குவதற்காக படுத்தார். அவர் தாயாருக்கு பிரியமானவனாக ஒரு வேதாந்தியாக எப்பொழுதும் கூடாரவாசியாக இருந்தார். அவர் வயதை பார்க்கும்போது மனிதனாக இருந்தாலும், அந்த காலத்தில் மனித இனம் அதிக நாட்கள் வாழ்ந்ததால், முதிர்வடைவது, பருவம் அடைவது தாமதமாக இருந்தது. அவர் நடைமுறையில் மனித பருவத்தை அடைந்து கொண்டிருந்தார். அவரது ஆழ்ந்த மத நம்பிக்கைகள், அவரது பிதா மற்றும் முற்பிதாவின் தேவனிடத்தில் அவரது விசுவாசம், தெய்வீக ஆசீர்வாதத்தின் ஒரு பங்கில் அவரது விருப்பம், ஆகியவை அவரை நாடு கடத்தப்பட்டவராக்கின. சந்தேகத்திற்கிடமில்லாமல் அவர் தனிமையையும் மன நோவையும் உடையவராக இருந்தார். அவர் தன்னுடைய பூமிக்குரிய நண்பர்களை விட்டு, கையில் காசு எதுவும் இல்லாமல் ஏதோ ஒரு வேலையைத் தேடி சென்றார்.

### "யாக்கோபை நான் சிநேகித்தேன்"

இது யாக்கோபுடன் தேவன் கொண்டிருந்த தொடர்பை குறித்து வேதவாக்கியங்களின் கூற்றாக இருக்கிறது. அவர் தனது தைரியத்தை, தனது விசுவாசத்தை, தனது பக்தியைக் காண்பித்திருந்தார். தேவன் அவருக்கு பரிசளிப்பார். இந்த சமயத்தில் அவருக்கு உற்சாக மூட்டுதல் அவசியமாக இருந்ததால் தேவன் அவருக்கு ஒரு அழகான கருத்துடைய கனவை கொடுத்தார். இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டு அதன் நுனி வானத்தை எட்டியிருந்தது. அதிலே தேவதூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாக இருந்தார்கள்.

இன்னும் அதில் மகிமையின் தேவனைக் கண்டு, அவர்

பேசக் கேட்டார். அந்த வார்த்தைகள் மிகவும் ஆச்சரிய மானதாகவும் உற்சாகம் ஊட்டுவதாகவும் இருந்தன. தேவன், யாக்கோபுடைய தகப்பனாரின் ஆசீர்வாதத்தை அவருக்கு உறுதி செய்தது மாத்திரமல்ல, மாபெரும் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்திற்கு சட்டபூர்வமான வாரிசாக அவரை அங்கீகரித்தார். இந்த வாக்குத்தத்தமே யூதர், கிறிஸ்தவர் மற்றும் மனுக்குலத்தினர் அனைவருக்கும் அனைத்து நம்பிக்கைகளுக்கும் அடிப்படையாக இருக்கிறது.

தேவனுடைய செய்தியாவது: ''நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும் தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னை கைவிடுவதில்லை.''

இந்த வார்த்தைகள் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டவைகள் போலவே இருந்தன. மேலும் ஈசாக்குக்கு உறுதி செய்யப்பட்டன. இப்பொழுது யாக்கோபுக்கும் உறுதிபண்ணப்பட்டது. அதுமுதல் அவர் தேவனுடன் உடன்படிக்கைக்குள்ளாக இருந்தார். அவர் அறிந்திருந்ததைக் காட்டிலும் அவரது முயற்சிகள் அனைத்தும் அவருக்கு நன்மை உண்டாகும்படி மேற்பார்வையிடப்படும்.

## ஒரு யூதனுமில்லை, ஒரு கிறிஸ்தவனுமில்லை

யாக்கோபு ஒரு கிறிஸ்தவர் அல்ல. கர்த்தருடைய கிருபை இந்த சுவிசேஷ யுகத்தில் சபைக்கு கொடுக்கப்பட்டது போல அவருக்கும் கொடுக்கப்பட்டதாக நாம் நினைக்கக் கூடாது. ''பரம அழைப்பின்'' பங்குதாரராக அவர் அழைக்கப்படவில்லை. அவர் உயிர்த்தெழுதலிலோ அல்லது வேறு எந்த வகையிலோ பரலோக சுபாவ மாற்றத்திற்கு வாக்குத்தத்தம் பண்ணப்படவில்லை. ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டது போலவே, அவருக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் அனைத்தும் பூமிக்குரியவைகளாகும்.

யாக்கோபு ஒரு யூதனுமல்ல. யூதர்கள் இதுவரை உண்டாகவில்லை. பிற்பாடு அந்த தேசம் இஸ்ராயேல் என்றும் அதன்பிறகு யாக்கோபின் பிள்ளைகள் யூதர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இன்னும் அவர்கள் பிறவாதிருந்தார்கள். அவர்கள் விசேஷித்த ஜனங்களானார்கள். தேசமானது வெறும் யாக்கோபின் பிள்ளைகளாக மாத்திரம் இல்லாமல், மோசே மற்றும் சீனாயின் நியாயப்பிரமாணத்தின் மூலம் தேவனுடன் ஒரு உடன்படிக்கையின் உறவுக்குள் கொண்டுவரப்பட்டார்கள்.

இப்படியாக முற்பிதாக்கள் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு நியாயப் பிரமாணத்திற்கு கீழாகவும் இல்லை, சுவிசேஷ யுகத்தில் அமைக்கப்பட்ட ஒரு வகுப்பிற்கு கீழாகவும் இல்லை. கானான் தேசம் மற்றும் உலகத்தாரின் ஆசீர்வாதத்தை பொருத்தமட்டில் அவர்கள் விசேஷமாக (தீர்க்கதரிசிகளும் பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்களும்) தேவனுடைய குறிப்பிட்ட மாபெரும் வாக்குத்தத்தங்களுக்கு உரியவர்களாயிருந்தனர். இந்த சுவிசேஷ யுகத்தின் ஆவியின் ஜெநிப்பித்தலை பெற்ற சபையில் பங்கு பெறாததால், மேசியாவின் ஆவிக்குரிய ராஜ்யத்தில் ஒரு பங்கை பெற அவர்களால் இயலாது. இந்த ராஜ்யம் சீக்கிரத்தில் சாத்தானை கட்டி, பாவத்தை தூக்கி எறிந்து, இருளையும், மூட நம்பிக்கைகளையும் சிதறடித்து, உலகத்தை தேவனை, அறிகிற அறிவினால் நிரப்பும். இந்த ''பரம அழைப்பில்'' பங்கு பெற அவர்கள் அழைக்கப்படவில்லை.

எனினும் ஒரு விசேஷித்த அழைப்பு அல்லது வாக்குத்தத்தம் அவர்களுடன் செய்யப்பட்டது. மற்ற யாருடனும் பண்ணப்படவில்லை. அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படியாக, இந்த முற்பிதாக்களுக்கு உயிர்த்தெழுதலில் மானிட பூரணம் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் மனுக்குலத்தினருக்கு மேலாக வைக்கப்பட்டு, ஆவிக்குரிய பரலோக, காணக் கூடாத மேசியாவின் ராஜ்யத்தின் பிரதிநிதிகளாகவும் பூமியின் ஆளுனர்களாகவும் அல்லது பிரபுக்களாக இருக்கவும் தகுதி பெறுவார்கள்.

இப்படியாக இதுவரையில் பிதாக்களாக அல்லது முற்பிதாக்களாக அங்கீகரிக்கப்பட்ட அவர்கள் அதற்கு பதிலாக சீக்கிரத்தில் மேசியாவின் முதல் குமாரர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். இவர்களுக்கு பூமிக்குரிய பரிபூரண ஜீவியம் கொடுக்கப்படும். தீர்க்கதரிசனம் இப்படியாக கூறுகிறது: ''உமது (மேசியாவின்) பிதாக்களுக்குப் பதிலாக உமது (மேசியாவின்) குமாரர் இருப்பார்கள். அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக (ஆளுனர்களாக)வைப்பீர்.'' (சங்கீதம்: 45:16)

வரப்போகிற தமது மகிமையின் ராஜ்யத்தைக் குறித்து இயேசு பேசும்போது கூறியதாவது: ''தேவனுடைய ராஜ்யம் பிரதியட்சமாக (வெளியரங்கமாக தெரியும்படி) வராது.'' (லூக்கா 17:20) மேலும் அவர் சீஷர்களிடம் கூறியதாவது. ''இன்னும் கொஞ்ச காலத்தில் உலகம் என்னைக் காணாது.'' (யோவான் 14:19) அவரது இரண்டாம் வருகையிலும் தமது ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையிலும் காணப்படுகிறவைகளைக் குறித்து விவரிக்கும்போது, தம்மையோ அல்லது அப்போஸ்தலர்களில் யாரையாவதோ மகிமையின் ராஜ்யத்தில் காண்பார்கள் என்பது பற்றி ஒரு வார்த்தை கூட கூறவில்லை. ஆனல் அவர் கூறியதாவது: ''நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறவர்களாக காண்பீர்கள்.'' (லூக்கா 13:28,29)

இயேசுவும் அவரது மணவாட்டி வகுப்பாரும்–ஒவ்வொரு தேசத்திலிருந்தும் சபை பிரிவுகளிலிருந்தும் இந்த யுகத்தில் வந்த பரிசுத்தவான்களும் அப்போஸ்தலர்களும்– உண்மையிலேயே உண்மையான ராஜ்யமாகவும் இருந்து உண்மையான மேற்பார்வையையும் அதிகாரத்தையும் பெற்றிருப்பார்கள். வேதவாக்கியங்கள் விவரிப்பதுபோல அவர்கள் காணக்கூடாதவர்களாக இருப்பார்கள். இவர்கள் அனைவரும் முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையால் ''ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவார்கள்.'' இனி பூமிக்குரிய ஜீவிகளாக இராமல் ஆவியின் ஜீவியாக, தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக, ''தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுகிறவர்களாக'' இருப்பார்கள்.

(2 பேதுரு 1:4) பரிசுத்த பவுல் மறுபடியும் அறிவிப்பது போல, சபையானது ராஜ்யத்திற்குள் நுழைவதற்கு முன் உயிர்த்தெழுதலின் மாறுதல் வர வேண்டும். ஏனெனில் ''மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்காது.'' (1 கொரிந்தியர் 15:50)

## கனவின் பொருள் என்ன

இந்த கனவையோ அல்லது சுவிசேஷ செய்தியையோ சரியானபடி உணர்ந்து கொள்வதற்கு தேவனோடு ஆரம்பத்தில் மனிதன் கொண்டிருந்த உடன்படிக்கை உறவு ஏதேனில் கீழ்ப்படியாமையால் அறுந்துபோனது என்பதை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். பாவிகளோடு நித்திய ஜீவனின் உடன்படிக்கை நிற்க இயலாது. ''பாவம் செய்கிற ஆத்துமா சாகும்.''

ஆனால் ஆதாமையும் அவரது இனத்தையும் இந்த மரணத்திலிருந்து, இந்த அழிவின் சாபத்திலிருந்து மீட்பதற்கு ஆரம்பத்திலேயே தேவன் திட்டம் வைத்திருந்தார். ஒரு இரட்சகரின் வேலையால் மட்டுமே இந்த தண்டனையை நீக்க முடியும் என்பதால் ஆபிரகாமை தேவன் தம்முடைய வீட்டிற்குள் கொண்டு வர முடியவில்லை. ஆபிரகாமுடன் ஏற்படுத்தப்பட்டு, ஈசாக்கு மற்றும் யாக்கோபுடன் உறுதி பண்ணப்பட்ட உடன்படிக்கை, ஏற்ற காலத்தில் அவர்களது சந்ததி மூலமாக ஒரு இரட்சகரை, விடுவிப்பவரை அனுப்புவார் என்ற ஒரு வாக்குத்தத்தமாக இருந்தது. இவர்கள் மூலமாக, பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் தேவனுடன் இசைவுக்கும் ஐக்கியத்திற்கும் வரக்கூடிய சலுகையினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

ஏணியானது, தேவனுக்கும் மனிதனுக்கும், வானத்துக்கும் பூமிக்கும் நேரடியான தொடர்பு என்ற கருத்தை குறிப்பிடுகிறது. ஏணியின் கீழ்பாகம் யாக்கோபுக்கு மிகவும் அருகாமையில் இருந்து. அவருடைய வித்தின் மூலமாக தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உறவை ஆரம்பிக்கும் வேலை நிறைவேற்றப்படும். இன்னும் தேவனுடைய சாட்சியும், அவரது உற்சாகமூட்டும் வார்த்தைகளும் யாக்கோபை இன்னும் விசுவாசத்திலும் முத்தைப் போன்று அதிக மதிப்புடைய இந்த மாபெரும் வாக்குத்தத்தத்தை உணர்ந்து கொள்ளுவதிலும் ஊக்கமூட்டுவதாக இருந்தது. இதற்காக அவர் கொடுத்த ஒரு வேளை கூழைக்காட்டிலும் இது அதிக மதிப்புடையது. ஆம், வீடு மற்றும் அதன் சுகத்தைக் காட்டிலும் அதிக மதிப்புடையது. கனவானது உத்தேசிக்கப்பட்டிருந்த அதன் பலனைப் பெற்றிருந்தது. யாக்கோபு அந்த நேரத்தில் மாத்திரமல்ல, அவரது மீதியான நாட்களிலும் கூட உற்சாகமூட்டப்பட்டார். இன்னும் இதைக் காட்டிலும் கனவானது வேதாகமம் மூலமாக தேவனுடைய ஜனங்களுக்கு அறியப்பட்டது, ஒரு ஆறுதலாகவும் புத்துணர்ச்சியை கொடுப்பதாகவும் இருந்தது.

தற்காலத்திய கிறிஸ்தவர்களுக்கும் இந்த பாடம் பொருந்தக் கூடியதாக இருக்கிறது. அப்போஸ்தலரின் போதனை மற்றும் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின் இன்னும் அதிகமான வெளிச்சத்தில், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் கடந்த கால பரிசுத்த தீர்க்கதரிசிகளும் ஆபிரகாமின் மாம்சத்துக்குரிய வித்தாக இருந்து உலகத்தை ஆசீர்வதிப்பதற்கு முன்பு இன்னும் ஒரு வேலை செய்யப்பட வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளுகிறோம். அந்த வேலை நமது கர்த்தராகிய இயேசுவினால் செய்யப்படும். பரிசுத்த, குற்றமற்ற, மாசில்லாத தேவ ஆட்டுக்குட்டியின் மரணம், நமது இனத்திற்கான தேவனுடைய தயவான திட்டத்தின் முழுமையான நிறைவேறுதலுக்கான முழு அடிப்படையையும் அமைத்தது.

சுவிசேஷ யுகத்தில் இரண்டாவது அம்சம் செயல்படுகிறது. தெரிந்துகொள்ளப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கூட்டம், ஆண்டவருடன் உடன் சுதந்தரராகும் ஒரு மணவாட்டி வகுப்பார் உலகத்திலிருந்து, யூதர் மற்றும் புறஜாதிகளிலிருந்து அமைக்கப்படுகின்றனர். இவர்கள் ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தை அமைக்கிறார்கள். ஐக்கியம் மற்றும் உறவின் ஏணி யாக்கோபிடம் கீழே வருவதாக இருந்தால், அது இன்னும் அதிகமாக கீழே கிறிஸ்துவில் மையப்படுத்தி வருவது இன்னும் அதிக நிச்சயம். இந்த கிறிஸ்துவுக்கு இயேசு கிறிஸ்து தலையாகவும் அவரது சபையின் விசுவாசமுள்ள அங்கங்களும் இருக்கிறார்கள்.

யாக்கோபு விழித்தபோது, அவர் ஜெயம் கொண்டரவராக உணர்ந்தார். சர்வ வல்லவர் இப்படியாக தமது அக்கறை, ஆசீர்வாதம் மற்றும் அங்கீகாரத்தை குறிப்பிட்டு, எதிர்காலத்தில் அவரது பாதுகாப்பையும் உறுதிப்படுத்தியது நண்பனற்ற மனிதனுக்கு ஆச்சரியமாகக் காணப்பட்டது. இது நிச்சயமாக தேவனுடைய வீடு, வானத்தின் வாசல் என்று கூறினார். அதிலிருந்து சபையானது தேவனுடைய வீடு, பெத்தேல் என்று அறியப்படுவதில் சந்தோஷமடைகிறது. ஜீவனுடைய கற்களும், இயேசு மூலைக்கல்லாகவும் கொண்ட தேவனுடைய மகா ஆலயமாக விரைவில் இந்த பெத்தேல் வானத்தின் வாசலாக இருக்கும். இதன் மூலம் சகல மகிமையின் காரியங்களும் மனுக்குலத்திற்கு வரும். இவை விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ள சகலருக்கும், தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற இளைப்பாறுதல், பூரணம், பரதீசு ஆகியவைகளாகும்.

யாக்கோபு தலையணையாக வைத்திருந்த கல்லை எடுத்து தூணாக நிறுத்தி, அதை தேவனுக்கு புனிதப்படுத்தும் விதமாக அதன் மேல் எண்ணெய் ஊற்றினார். இவரது உதாரணத்தையே எகிப்தியர்கள் வானலாவிய தூண்களை நிறுத்தியும், பாபிலோனியர்கள் கூரான கோபுரங்களை கட்டியும் கிறிஸ்தவர்கள் கூரான கோபுரத்தை உடைய ஆலயங்களை கட்டியும் பின்பற்றினார்கள். எனினும் இவைகளெல்லாம் அறியாமல் வானத்தை குறிப்பிட்டாலும், விரைவில் வானத்திற்கும் பூமிக்கும் தொடர்பை ஏற்படுத்தும்படி ஒரு ஏணி இருக்கும் என்ற உண்மையை குறிக்கிறது. அந்த ஏணி தான் மேசியாவின் ராஜ்யமாக இருக்கும்.

பின்னர் யாக்கோபின் தூண் எருசலேமுக்கு எடுத்துச் செல்லப்பட்டு யூத ராஜாக்கள் முடி சூடும்போது பயன்படுத்தப்பட்டது என்று பாரம்பரியம் நமக்கு சொல்லுகிறது. பாபிலோனியர்கள் எருசலேமை வீழ்த்தியபோது அந்த தூண் எரேமியாவினால் எடுத்துச் செல்லப்பட்டதாக பாரம்பரியம் கூறுகிறது. இன்னும் அந்த தூண் ஐயர்லேண்டுக்கு (Ireland) எடுத்துச் செலப்பட்டு அங்கே சில காலம் அவர்களது இராஜாக்கள் முடிசூடுவதற்கு பயன்படுத்தப்பட்டதாக பாரம்பரியம் கூறுகிறது. இதே தூண் வெஸ்டமின்ஸ்டர் அப்பேயில் (Westminister Abbey) இருப்பதாகவும் பிரிட்டிஷ் ராஜரீக முடிசூடுதலுக்கான சிம்மாசன இருக்கையாக பயன்படுத்தப்படுவதாகவும் அந்த பாரம்பரியம் கூறுகிறது.

R5200

# The Privilege and the Necessity of Prayer
# ஜெபத்தின் சலுகையும் அவசியமும்

*''நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்.'' (எபிரேயர் 4:16)*

ஜெபம் என்பது எல்லா வகையான விண்ணப்பங்களுக்கும் அது ஒரு வேண்டுகோள், ஒரு கீர்த்தனை, நன்றி கூறுதல் மற்றும் ஸ்தோத்திரம் செலுத்துதல் அனைத்திற்கும் ஒரு பொதுவான வார்த்தையாக இருக்கிறது. இரந்து வேண்டுதல் என்பது தொடர்ச்சியான வேண்டுகோள். மறுபடியும் மறுபடியுமாக ஜெபித்தல் நீண்டகால விருப்பம், நமது வேண்டுதல்களுக்கு கர்த்தரிடமிருந்து பதிலுக்காக காத்திருத்தல் போன்றவற்றை குறிக்கிறது.

''ஜெபம் என்பது ஆத்துமாவின் உண்மையான விருப்பத்தை தெரிவித்தல்.''

காயீன் மற்றும் ஆபேலால் செலுத்தப்பட்ட பலிகள் தான் முதன் முதல் மனுக்குலம் தேவனை நெருங்கினதற்கான முதலாவது அறிவிப்பாக இருக்கிறது. அவர்கள் விண்ணப்பம் ஏதும் வைக்காமல் பாவத்தை ஒத்துக்கொண்டு பலியுடன் பிதாவிடம் வந்தார்கள். பாவ நிவாரண பலியை அடையாளப்படுத்தும்படி யாராவது பலியை கொண்டு வந்தால் தேவன் அதை ஏற்றுக் கொள்ளுகிறார். மற்றதை அவர் எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ளுவதில்லை.

ஏவாளிடம் தெளிவில்லாமல் செய்யப்பட்டிருந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படியாக இரண்டாயிரம் வருடங்களுக்கு பின்பு தேவன் ஆபிரகாமை தெரிந்துகொண்டார். அவரிடம் தேவன், அவருக்குள்ளும் அவரது வித்திற்குள்ளும் பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்ற உறுதியான வாக்குத்தத்தத்தை செய்தார். தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையை அவரது வாரிசாகிய ஈசாக்குடன் புதுப்பித்தார், ஆனால் இஸ்மயேலுடன் அல்ல; யாக்கோபுடன் புதுப்பித்தார், ஆனால் ஏசாவுடன் அல்ல. இவர்கள் தேவனிடம் ஜெபிக்க சலுகை பெற்றிருந்தார்கள், ஏனெனில் தேவனோடு ஐக்கியம் கொள்ள அவர்களது விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டிருந்தனர்.

முடிவாக, இந்த தெய்வீக கிருபை மற்றும் சலுகையின் ஆசீர்வாதங்கள் இஸ்ரயேல் தேசத்திற்கு விரிவுபடுத்தப்பட்டன. மோசே மத்தியஸ்தராக இருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழாக இந்த சலுகைகளுக்குள் முழுமையான அர்த்தத்தில் சென்றார்கள். அந்த நேரம் முதல் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு பெற்றிருந்ததைப் போல தேவனிடம் விண்ணப்பம் பண்ணக் கூடிய அதே சந்தர்ப்பங்களை பெற்றார்கள். உண்மையிலேயே சில காரியங்களில் அவர்கள் ஒரு முன்னுரிமை நிலையை பெற்றார்கள். அவர்கள் ஒரு நிழலான பாவநிவாரண நாளை பெற்றிருந்தார்கள். அதிலே அவர்கள் நிழலாக பரிசுத்தம் பண்ணப்பட்டார்கள். இந்த நிழலான பரிசுத்தமாக்கப்படுதலினால் தாவீது, எசேக்கியா இன்னும் மற்றவர்களைப் போல அவர்கள் தேவனிடம் வர அனுமதிக்கப்பட்டார்கள்.

எருசலேமின் தேவாலயம் தேவனுடைய வீடு என்று அழைக்கப்பட்டது. ஜனங்கள் ஜெபிக்க ஆலயத்துக்கு சென்றார்கள். அவர்கள் எங்கேயும் எல்லா இடத்திலும் ஜெபிக்கக் கூடாது என்று மிகவும் தெளிவாக அறியப்பட்டிருந்தது. இது சமாரியா ஸ்திரீயிடம் இயேசுவின் உரையாடலின் மூலம் குறிப்பிடப்படுகிறது. அவர்கள் ஆலயத்துக்கு சென்று ஜெபிக்கும் பொழுதுதான் அவைகள் கேட்கப்பட்டன. ஜெபிப்பதற்கு சரியான இடம் சமாரியாவின் மலையாகிய கெர்சீம் என்று சமாரியர்கள் கூறி வந்தார்கள். இந்த காரியத்தைக் குறித்து சமாரிய ஸ்திரீ கேட்ட பொழுது, யூதர்கள் கூறுவதுபோல எருசலேமில் தொழுதுகொள்ளுவதுதான் சரியானது என்று கூறினார். (யோவான் 4:20−24)

யூதா தேசம், அவர்கள் தேவனிடம் செய்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மூலமாக, தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள்ளாக இருந்தார்கள். ஆகையால் அவர்கள் தேவனிடம் ஜெபிக்க அனுமதிக்கப்பட்டார்கள். எல்லா ஜெபங்களையும் தேவன் கேட்பதில்லை. ஒரு உடன்படிக்கையின் உறவுக்குள் இருந்து ஒரு குறிப்பிட்ட மனநிலையில் ஏறெடுக்கப்படும் ஜெபங்களைத்தான் கேட்கிறார். இஸ்ரயேல் பெற்றிருந்த சலுகையை, வெளியாட்கள் அவர்கள் நேர்மையுள்ள உண்மையுள்ள புறஜாதியாராக இருந்தால் கூட பெற்றிருக்கவில்லை.

## கிருபாசனத்துக்கு செல்லுதல் ஒரு விசேஷித்த சலுகை

சுவிசேஷ யுகத்தில், தேவனிடத்தில் முழு அர்ப்பணம் பண்ணினவர்கள் தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளைகளாவதால் தங்கள் பிதாவிடம் கேட்பது போல அவரிடம் தைரியமாக, நம்பிக்கையுடன் ஜெபத்தில் கேட்கலாம். தேவனுடன் அர்ப்பணம் பண்ணாதவர்கள் தேவனிடம் நெருங்க பரிகாரியை பெற்றிருக்கவில்லை. தேவன் அளிக்கும்படி வாக்குத்தத்தம் பண்ணியிருந்த ஆசீர்வாதங்களை பெறுகிற உண்மையான விருப்பத்துடனும், ஜெப சிந்தையுடனும் வருகிறவர்கள், ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு மட்டுமே ஜெபிக்கும் சலுகை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை காண்பார்கள். அதை ஒரு சலுகையாக மதிக்காதவர்களும் வரமாட்டார்கள். ஏனெனில் தேவன் உலகிற்கு அதை இன்னும் உத்தேசிக்கவில்லை. ஜெபமானது தேவனுடைய பிள்ளைகளுடைய ஒரு சலுகை.

கொர்நேலியு தேவனிடம் இணக்கத்தை நாடின ஒரு மனிதனாக இருந்தான். அவன் வருடக்கணக்காக ஜெபித்தும், தான தருமங்கள் பண்ணியும், குறித்த காலம் வரும்வரை தேவனுக்கு முன்பாக செல்லவில்லை. இயேசு மரித்து, பரலோகத்துக்கு எழுந்தருளி, நமக்காக தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்த பிறகே அந்த நேரம் வந்தது. (அப்போஸ்தலர் 10:1, 2, 4; எபிரேயர் 9:24) சிலுவை மரணத்திற்கு மூன்றரை வருடங்களுக்கு பிறகு, யூதர்களின் விசேஷித்த கிருபையின் காலம் முடிந்த பிறகு, இந்த மனிதனின் ஜெபமும் தானதருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவரது சமூகத்தில் வந்தெட்டியது. ஆனால் அதன் பிறகு கூட, கிறிஸ்துவுக்குள் தேவனுடைய

ஆசீர்வாதத்தை எப்படி பெற்றுக் கொள்ளுவது என்பதை போதிக்கும்படி யோப்பா பட்டணத்திற்கு சில மனிதர்களை அனுப்பி பரிசுத்த பேதுருவை அவனது வீட்டிற்கு அழைக்க வேண்டியிருந்தது. கொர்நேலியு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபோது, நமது கர்த்தர் அவனது பரிகாரியானார், பரிசுத்த ஆவியும் அவன்மேல் வந்தது. அதன்பிறகு கிருபாசனத்தில் தேவனிடம் செல்ல சலுகையைப் பெற்றார்.

இப்பொழுது மனுமக்களிடம் இவ்விதமாகவே இருக்கிறது. ஜெபம் செய்யும் சலுகையை பெற ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. ஒவ்வொருவரும் தான் ஒரு பாவி என்பதையும் தேவனிடம் செல்ல கிறிஸ்துவைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் அங்கீகரிக்க வேண்டும். பூமிக்குரிய ராஜ அரண்மனையில் ஒருவர் ராஜாவை பார்க்க வேண்டும் என்றால், முதலில் ராஜாவை பார்க்க ஒரு அழைப்பை பெற வேண்டும். அதன்பிறகு குறித்த நேரத்தில் ஒரு குறிப்பிட்ட ஆடையுடன் செல்ல வேண்டும். பரலோக அரண்மனைக்கும் இதே முறைகள் தான். இயேசு கிறிஸ்து மூலமாக மட்டுமே ஒருவன் தேவனிடம் வரமுடியும். அந்த மனிதன் தனது இரட்சகராக நமது கர்த்தரை ஏற்றுக் கொண்டு, தன்னை ஞானஸ்நானத்தில் அர்ப்பணம் பண்ணின பின்பு, நமது கர்த்தர், அவனது பரிகாரியாக, அவனது பலவீனங்களை தமது சொந்த நீதியின் வஸ்திரத்தினால் மூட வேண்டும். பின்பு அவனை பிதாவிடம் சமர்ப்பிக்கிறார். அதன்பின்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஜெபிக்கும் சலுகை கொடுக்கப்படுகிறது.

## குறிப்பிட்ட குணலட்சணங்களை உடையவர்கள் இயற்கையாகவே தேவனிடம் இழுக்கப்படுகிறார்கள்

உலகமானது தேவனை ஜெபத்தின் மூலம் நெருங்க முடியாதிருந்தால், எந்த முறைப்படி அவர் மனிதர்களை இழுக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது. பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் கிறிஸ்துவிடம் வரமாட்டான் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. (யோவான் 6:44) பதில் என்னவென்றால் பரிசுத்த ஆவி மூலமாக இந்த இழுக்குதல் நடைபெற முடியாது என்பதே. ஏனெனில் உலகமானது பரிசுத்த ஆவியை இன்னும் பெறவில்லை. சர்வ வல்லவர் மனுக்குலத்தை இழுக்கும் சக்தியை அப்பியாசப்படுத்துவது வெவ்வேறு கோணத்தில் இருக்கிறது. சிலர் தேவனை ஆராதிக்க மிகவும் விருப்பம் உள்ளவர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் குறைவான விருப்பத்தை உடையவர்களாக இருப்பார்கள். இன்னும் மற்றவர்கள் விருப்பமே இல்லாதிருப்பார்கள். இந்த வேறுபாடு அவர்களது மூளையைப் பொருத்து இருக்கிறது. இந்த காரியத்தில் மனுக்குலமானது வெவ்வேறான அளவில் பிறக்கிறார்கள். (சங்கீதம் 51:5)

நமது பிறப்பிற்கு முன்பே பலவிதமான அபூரணங்கள் நம்மேல் பதிக்கப்பட்டன. வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: ‘‘நீதிமான் ஒருவனாகிலும் இல்லை, எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்கள்.’’ தேவன் அங்கீகரிக்க விரும்புகிற திட்ட அளவில் (Standard) எல்லாரும் குறைவுபடுகிறார்கள். ஆனால் மனுக்குலத்தாரிடையே விழுகையின் விளைவாக இழந்துபோன சமநிலையற்ற சிந்தையில் தங்களது மரியாதையை இழக்காதவர்களாக சிலர் இருக்கின்றனர். ஒருவேளை அவர்கள் மனசாட்சியுடையவர்களாக அல்லது நீதியை உணர்ந்து கொள்ளுவதில் நன்கு அபிவிருத்தி அடைந்தவர்களாக இருக்கின்றனர். இந்த குணங்கள் அல்லது அதைப் பெற்றிருப்பவர்கள் தேவனிடம் இழுக்கப்படுகின்றனர். மேலும் அவரில்லாமல் அவர்களால் சந்தோஷமாக இருக்க முடியாது என உணருகின்றனர். இது கவரக் கூடிய சக்தியாக இருக்கிறது.

இந்த கவரும் சக்தி காந்த சக்தியின் விளைவைப் போன்று இருக்கிறது. இரும்பு துகள்கள் கலந்துள்ள மரத்தூள்கள் உள்ள ஒரு பெட்டியின் மேற்பரப்பில் ஒரு காந்தத்தை கொண்டுபோனால் இரும்பு துகள்கள் எல்லாம் காந்தத்தில் ஒட்டிக் கொள்ளும். அதே சமயம் மரத்துகள்கள் எந்தவித பாதிப்பும் அடையாது. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காந்தத்தை தவிர வேறு ஒன்றினாலும் இரும்பு துகள்கள் இழுக்கப்படாது.

மனிதன் தேவரூபத்தில் சிருஷ்டிக்கப்பட்டான். இந்த ரூபமானது களங்கப்பட்டது. ஆனால் முற்றிலுமாக சீரழிந்து போகவில்லை. ஒவ்வொரு மனிதனும் சமநிலையற்ற மூளையைப் பெற்றிருக்கிறான். சிலர் ஒரு திசையிலும் மற்றவர்கள் வேறு திசையிலும் சமநிலையற்று இருக்கிறார்கள். குறைவாக பலவீனப்பட்ட உணர்வுகளை பெற்றிருப்பவர்களிடம் சத்தியம் வரும்போது, தேவனிடம் அவர்கள் மிகவும் நெருக்கமாக இழுக்கப்படும்படியாக அதை ஆராயும்படி இழுக்கப்படுகிறார்கள். ஆனால் அதிகமான பலவீனப்பட்ட உணர்வுகளை பெற்றிருப்பவர்கள் இந்த அனுபவத்தை பெற மாட்டார்கள்; தேவனிடம் இழுக்கப்படமாட்டார்கள். ஒரு வேளை அதிர்ஷ்டவசமாக அவரை கண்டு கொள்ளலாம்.

இந்த இழுக்கப்படும் சக்தி இல்லாதவர்களை குறைகூறக் கூடாது, ஏனெனில் அவர்கள் சாதகமற்ற சூழ்நிலைகளில் பிறந்தார்கள். பக்தியுள்ளவர்கள் சலுகை பெற்றவர்கள். தேவனிடம் வருகிறவர்கள் கிறிஸ்துவிடம் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த வேண்டும். இந்த விசுவாசம் இல்லாமல் ஆசீர்வாதம் இருக்காது. ஆரம்பத்தில் தேடுபவரால் இந்த ஆசீர்வாதங்களும் சலுகைகளும் தெளிவாக உணர்ந்து கொள்ளப்படக் கூடாதிருக்கும். நீதிமானாக்கப்பட்ட பிறகு உணர்ந்துகொள்ளக் கூடும். அவன் தேவனை அறிந்து கொள்ள விரும்புகிறான், அவன் தேடுகிறான், அவன் கண்டடைகிறான். அவன் தட்டுகிறதினால் அது அவனுக்கு திறக்கப்படுகிறது. (மத்தேயு 7:7,8)

ஆகையால் யாராவது தேவனை தேடினால், அவர்கள் அவரை காண்பார்கள். ஏனெனில் வேதவாக்கியங்கள் கூறுகிறதாவது: ‘‘தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்.’’ (யாக்கோபு 4:8) இப்படியாக தேவனிடம் போகும் வழியை கண்டுபிடிக்கிறவர்கள் நற்குணங்களை பெற்றிருப்பதால் நன்றியுடைவர்களாக இருக்க வேண்டும். இது அவர்களை தேவனை உணர்ந்து கொள்ள வழிநடத்துகிறது. ஒரு குறிப்பிட்ட குணலட்சணத்தை உடையவர்கள் வழியில் தொடர்ந்து செல்வார்கள், உண்மையுள்ளவர்களாக இருந்தால் பரிசை அடைவார்கள். அதை பெற்றிராதவர்கள் அடுத்த யுகத்தில் அப்படி ஆகும் வரை கர்த்தரால் இழுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள். ஆகையால்

தற்கால யுகத்தில் ஒவ்வொருவரும் இழுக்கப்படுவார்கள் என்று நாம் நினைக்கக் கூடாது.

ஒருவன் இழுத்துக் கொள்ளப்பட்ட பிறகு வழிநடத்தப்பட்டு, போதிக்கப்படுவார்கள். பிறகு அவனது சித்தம் செயலுக்குள் வரும். எந்த மார்க்கத்தை அனுசரிக்க வேண்டும் என்பது அவனுடைய முடிவாகும். சுயதியாகம் இல்லாமல், கிறிஸ்து மூலமாக அல்லாமல் யாரும் பிதாவிடம் வர முடியாது என்பதை ஒருவன் காணும்போது, பிறகு எல்லாம் அவனது மனதிற்கு தெளிவாக வருகிறது. சில வேத வாக்கியங்கள் இந்த பாதை கடினமானது என்பதையும் சில வேத வாக்கியங்கள், இந்த பாதையின் முடிவில் கிடைக்கும் கனம், மகிமை மற்றும் சாகாமையையும் கூறுகின்றன. என்ன செய்ய வேண்டும் என்பதை அந்த மனிதனே முடிவு செய்ய வேண்டும். அவன் தீர்மானம் செய்யும் வரை தேவனுடைய வீட்டிற்குள் முழுமையாக வருவதில்லை. பிறகு மரணம் வரையிலான அர்ப்பணிப்பு என்ற ஒரு நடவடிக்கைக்குள் வருகிறான். அதன் பிறகுதான் பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலுக்கு வருகிறான். கிறிஸ்துவின் பள்ளியில் நுழைகிறான்.

### விசுவாச வீட்டாருக்கு ஜெபம் ஒரு சலுகை

யூத யுகத்தில் யூதர்கள் ஜெபத்தின் மூலம் தேவனை நெருங்கும் சிலாக்கியத்தை பெற்றிருந்தார்கள். ஆனால் சுவிசேஷ யுகத்தில் இந்த சலுகையை அவர்கள் பெற்றிருக்கவில்லை. நியாயப்பிரமாண சட்டத்தின் கீழாக வருடந்தோறும் பாவ நிவாரண நாளின் பலியை செலுத்தும்போது ஜெபம் செய்யும் சலுகையை பெற்றார்கள். ஆனால் நிழலான பாவ நிவாரண பலிகள் நிறுத்தப்பட்டவுடன், உடன்படிக்கை அவர்களுக்கு உறுதிப்படுத்தின இந்த சலுகைகள் அனைத்தும் முடிவடைந்தது. ஆகையால் யூதர்கள் தேவனிடம் செல்ல முடியாதவர்களாயினர். அவர்கள் இன்னும் நியாயபிரமாணத்தின் கீழாக இருக்கின்றனர். ஆனால் அதன் விசேஷித்த அம்சங்களை இழந்திருக்கின்றனர். ஏனெனில் உண்மையான ஆசாரியர் தோன்றியவுடன் நிழலான ஆசாரியத்துவம் முடிவுக்கு வந்தது.

ஆகையால் இந்த காலத்தில் கிறிஸ்துவின் சபையார் மட்டுமே ஜெபத்தில் தேவனிடம் வரும் விசேஷித்த சலுகையை பெற்றிருக்கிறார்கள். ஏனெனில் மாபெரும் மெய்யான பிரதான ஆசாரியர் தம்மையே பிரியமான பாவ நிவாரண பலியாக ஒப்புக் கொடுத்திருக்கிறார். அவரில் விசுவாசம் வைக்கிறவர்களும், பலியின் உடன்படிக்கையின் கீழ் வருகிறவர்களும் மட்டுமே சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஜெபத்தில் தேவனிடம் இழுக்கப்படுகிறார்கள்.

அர்ப்பணம் செய்த வகுப்பார் மட்டுமே-உதவி ஆசாரியர்கள், புது சிருஷ்டிகள்-கிருபாசனத்தண்டையில் நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் சேர இப்படியாக ஊக்குவிக்கப்படுகிறார்கள். ''விசுவாச வீட்டாரைச்'' சேர்ந்த அனைவரும் ஜெபத்தின் சலுகைகளையும், பரிந்து பேசுதல், மற்றும் நன்றி கூறுதல் போன்ற சலுகைகளையும் அனுபவிப்பார்கள். பாவ நிவாரணத்தில் விசுவாசத்தின் மூலம் பாவ மன்னிப்பின் உணர்வையும், தேவனுடைய சமாதானத்தில் களிகூருதலையும் அனுபவிப்பார்கள்.

ஆயிர வருட யுகத்தில், ஒருவன் பெற்றிருக்கும் ஒவ்வொரு விசேஷித்த நல்ல குணமும் அனுகூலமாகவும் ஒவ்வொரு தீய குணமும் அனுகூலமற்றதாகவும் இருக்கும். மேசியாவின் உதவியில்லாமல் உயர்த்தப்படக்கூடிய எந்த அனுகூலமும் இவ்வளவு பெரியதாக இருக்காது. குறைவாக இழிவு நிலைக்குச் சென்றவர்கள் அந்த அளவுக்கு பின்வாங்கமாட்டார்கள். ஆனால் அதிகமாக கிருபை தேவைப்படும்போது, அது வழங்கப்படும். மாபெரும் மத்தியஸ்தரின் வல்லமை எல்லா நிலைமைகளையும் சரிகட்டும். ஏனெனில் இதற்காக கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்று வேதவாக்கியங்கள் நமக்கு உறுதிபடுத்துகின்றன. நீதிமான் இல்லாததினால் ஒருவனும் இல்லாததினால், தேவனுடன் முழு இணக்கத்திற்கு வரும்படி அனைவரும் மாபெரும் மேசியாவின் உதவியை பெற வேண்டும்.

### ஜெபம் ஒரு வாய்ப்பு மற்றும் அவசியம்

ஜெபமானது ஒரு கட்டளையாக இராமல் ஒரு சலுகையாக இருப்பதால், நமது நிலைமை அதை அவசியமானதாக ஆக்குகிறது. ஆதி பூரணத்திலிருந்து மனிதன் விழுந்துபோனதால், நமது மாம்சம் பலவீனங்களையும் குறைகளையும் உடையதாக இருக்கிறது. எனினும், புது சிருஷ்டியாக நாம் இந்த பலவீனங்களுக்கு பொறுப்பாகிறோம். இந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஒரே வழி கிருபாசனத்திற்கு சென்று தேவையான நேரத்தில் உதவியை பெறுவதுதான். கிருபாசனத்தண்டைக்கு ஜெபத்தில் அடிக்கடி செல்லுபவர்கள், சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிற அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள் என்பதை குறிக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை தேவன் அவனது சலுகைக்காகவும் நன்மைக்காகவும் கொடுத்திருக்கிறார்.

ஒருவரது நலத்திற்கு ஜெபம் அவசியமாக இருக்கிறது. அவர் தனது ஜீவியத்தின் சலுகைகளையும் ஆசீர்வாதங்களையும் சரியானபடி அனுபவிப்பார். தேவனை ஆராதிப்பதற்கு நம்மை தூண்டுகிற மதிப்புக்குரிய உறுப்பை பெற்றிருக்கிறோம். அறிந்தோ அறியாமலோ இந்த ஆராதனையை சிதைத்தால் அது நமக்கு நன்மை பயக்காது. இந்த விஷயத்தில் உலகத்தில் பெரும்பாலோரின் நன்மைக்கு பயன்படவில்லை. ஆனால் கிறிஸ்தவர்கள் அதை பயன்படுத்துகிறார்கள்.

சரியான கவனிப்பை உடையவர்கள் எப்பொழுது ஜெபம் பண்ண வேண்டும் என்பதை தீர்மானிப்பதில் எந்தவித கஷ்டமும் இருக்காது. சரியானபடி கவனத்துடன் இருப்பவர்கள் எதற்காக ஜெபம் பண்ண வேண்டும் என்பதை தொடர்ந்து காண்பார்கள். அவன் கஷ்டத்தை முன்னறிந்து, ''இதைக் குறித்து நாளைக்கு ஜெபிப்பேன்'' என்று கூறினால் அவன் தவறு செய்கிறான். வரக்கூடிய ஒரு துன்பத்தைக் குறித்து ஒருவன் முன்னறிந்தவுடனே ஜெபத்தில் அது முக்கியத்துவம் பெற வேண்டும். ''தட்டுகிறவன் எவனோ அவனுக்குத் திறக்கப்படும்.'' தெய்வீக சந்தோஷத்தை தேடுகிறவர்கள் அதைக் கண்டடைவார்கள்.

கர்த்தரின் ஜனங்கள் ஒவ்வொரு திசையிலும் மிகவும் கவனமாக இருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நமது நேரம் அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. அதை அவருக்கு செலுத்துவதில் கவனமாயிருப்பது நமது கடமையாக இருக்கிறது. நமது நேரத்தை அவருக்கு அர்ப்பணித்துவிட்டு,

கதைப் புத்தகம், உலகப்பிரகாரமான இலக்கிய நூல்கள் ஆகியவைகளை படிப்பதிலும் அல்லது விளையாட்டுகளிலும் நேரத்தை வீணடித்தால், இவைகள் பாவமான காரியங்களாக இல்லாதிருந்தாலும், நாம் சரியானபடி நமது நேரத்தை பயன்படுத்தவில்லை. இதே போல நமது தவறான உணர்வுகளை கவனித்து, சுயத்தை கட்டுப்படுத்தவும் நமது பலவீனத்திற்கு எதிராகவும் மற்றவர்களது பலவீனத்திற்கு எதிராகவும் பாதுகாக்கவும் நாம் நாட வேண்டும். நல்ல வார்த்தைகளையும் நல்ல வேலைகளையும் நாம் முழுவதுமாக பெறும்படிக்கு கர்த்தருடைய வசனங்களை நாம் கவனிக்க வேண்டும்.

ஒவ்வொரு சோதனையும் ஒவ்வொரு தவறான உணர்வும் நமக்கு ஒரு விசேஷித்த சோதனையாக, ஒரு விசேஷித்த உணர்ச்சியாக இருக்கிறது. ஒரு சிறிய தவறான உணர்வு கூட வழிநடத்தலாம் என்பதை யாரும் அறியமாட்டார்கள். வேத வாக்கியங்கள் நம்மை கவனிக்கும்படி எச்சரிக்கின்றன. ஏனெனில் ஒரு சிறிய காரியமாக காணப்படுவது கூட ஒரு பெரிய காரியத்திற்கு வழி நடத்தலாம். சிறிய காரியமாக காணப்படுகிற ஒன்று நமது முழு வாழ்க்கையில் ஒரு ஆபத்தான செயலாக இருக்காது என்று பொருள் படாது.

ஊழியத்திற்கு அதிகமான சந்தர்ப்பத்தை பெறுகிறவர்கள், குறைவான சந்தர்ப்பத்தை பெறுகிறவர்களைக் காட்டிலும் குறைவாகவே தவறான உணர்வுகளுக்கு வழி நடத்தப்படுவார்கள். ஆகையால் நாம் ''அசதியாயிராமல், ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஆவியில் அனலாயிருந்து கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும்.'' (ரோமர் 12:11) உலகம் மற்றும் அதன் சோதனைகள், நமது சொந்த மாம்சம் மற்றும் அதன் பலவீனங்கள், சத்துருவானவன் மற்றும் அவனது வஞ்சகங்கள் இவைகளுக்கு எதிராக நம்மை கவனிப்பதே நம்மை மிகவும் சுறுசுறுப்பாக வைத்திருக்கும்.

காலத்தின் அடையாளங்களையும் நாம் கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நமது கர்த்தரின் காலத்தில், தங்களை சந்திக்கும் காலத்தை அறியாதிருந்ததினால் சிலரை அவர் கண்டித்தார். அவரது வார்த்தைகளாவது: ''பூமியின் தோற்றத்தையும் வானத்தின் தோற்றத்தையும் நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, இந்த காலத்தையோ நிதானியாமற் போகிறதென்ன?'' (லூக்கா 12:56) நாம் வேலையிலும் சந்தோஷமாயிருப்பதிலும் அதிகமாக ஈடுபட்டிருந்தால் காலத்தை ஆராய்வதிலும் சரியாக கவனிப்பதிலும் நாம் கஷ்டத்தைக் காண்போம்.

## விழித்திருந்து ஜெபத்தில் ஒப்படைத்தல்

சோதிக்கப்படுவது என்பது ஒன்று, சோதனைக்குள் நுழைவது என்பது மற்றொன்று. நம்முடைய கர்த்தர், ''எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார்.'' சோதிக்கப்படுவதற்கு அவர் எவ்விதத்திலும் இடங்கொடுக்கவில்லை. அதேபோல நம்மிடையேயும் இருக்க வேண்டும். நாம் சோதிக்க இடங்கொடுக்காதபடி சாத்தானை எதிர்க்க வேண்டும். கவனித்து, ஜெபிக்க வேண்டும். நாம் அசிரத்தையாக இருந்தால், ''இந்த ஒரு சிறிய இடங்கொடுத்தல் நமக்கு தீங்கிழைக்காது'' என்று நினைத்தால் நாம் ஆபத்தில் இருக்கிறோம். விழித்திருந்து தொடர்ந்து ஜெபிப்பது தான் நமக்கு பாதுகாப்பான நிலைமை. ஏனெனில் நாம் சோதனைக்குள் நுழைந்தால் இது எதில் முடியும் என்பதை நாம் அறியோம். சமயோகிதமாக ஒருவர் சொல்லியிருப்பதாவது: ''நமது தலைக்குமேலே பறவைகள் பறப்பதை நாம் தடுக்க முடியாது, ஆனால் நமது தலையின் மேல் கூடுகட்டுவதை தடுக்க முடியும்.''

நமது கர்த்தர் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரி, பரிசுத்த பேதுரு அப்போஸ்தலர்களில் மிகவும் நம்பிக்கையுடைவராக இருந்தார். அவர் நமது கர்த்தரிடம் கூறியதாவது: ''உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்.'' (மத்தேயு 26:33) அவரிடத்தில் பலவீனம் எவ்வளவு இருந்தது என்பதை அவர் அறியாதிருந்தார். ஏனெனில் நமது ஆண்டவர் விழித்திருந்து ஜெபித்த அந்த முக்கியமான இரவில் முதலாவது தூக்கத்தில் விழுந்தவர்களில் பேதுருவும் ஒருவர். அதன்பிறகு அவர் கர்த்தரை மறுதலிக்கிற ஒருவராக இருந்தார். மறுதலித்து, சபிக்கவும் செய்தார்.

நமது ஆண்டவர் பரிசுத்த பேதுருவிடம் கூறின வார்த்தைகளை ஞாபகப்படுத்துகிறோம். ''சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையை சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களை புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்.'' (லூக்கா 22:31,32) பரிசுத்த பேதுருவின் தைரியம் சத்துருவானவன் அவருக்கு முன் ஒரு கண்ணியை வைக்க வழி நடத்தியது. அவர் ஆசாரியனின் அரண்மனை முற்றத்திற்கு சென்று அங்கிருந்த மற்றவர்களோடு கலந்திருக்கும் போது இந்த குணத்தை அவர் வெளிப்படுத்தினார். பரிசுத்த யோவான் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவராக இருந்தபடியினால், பரிசுத்த பேதுருவை அழைத்துச் சென்றார். பரிசுத்த பேதுரு, அவரது பேச்சினால் கலிலேயன் என்று தெரிந்து கொள்ளப்பட்டிருந்தும், ஆசாரியனுடைய வேலைக்காரன் காதை வெட்டினவராக இருந்தும்கூட, பேதுரு தைரியமாக உள்ளே சென்றார். (யோவான் 18:15,16)

நமது கர்த்தர் என்ன நடக்கும் என்பதை முன் கூட்டியே சொல்லியிருந்தார். ''பேதுருவே, இன்றைக்கு சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன்.'' (லூக்கா 22:34) அந்த சோதனை நாளின் இரவில் இது நடந்த பிற்பாடு, பரிசுத்த பேதுரு இயேசுவின் வார்த்தைகளை நினைவு கூர்ந்து, ''வெளியே போய், மனங்கசந்து அழுதான்.'' (லூக்கா 22:62) அவர் அது போல செய்திராதிருந்தால் அவருக்கு என்ன நடந்திருக்கும் என்பதை நாம் அறியோம். மறுதலித்தது அவரது மாம்சீக பலவீனத்தினால்தான் என்பது அவரது அழுகை மூலம் காண்பிக்கப்பட்டது.

பரிசுத்த பேதுரு தவறான ஒரு நடக்கையை எடுத்திருக்கலாம். ஆனால் அவர் இப்படியாக சொல்லியிருக்கலாம்: ''என்னுடைய ஜீவனுக்காகவும், இந்த காரியத்தில் சிக்கிக் கொள்ளாதிருப்பதற்கு நான் செய்தது சரிதான்.'' இப்படியாக இருந்திருந்தால் அவர் தவறான இருதய நிலையில் மாட்டியிருப்பார். ஆனால் தன்னை காத்துக் கொள்ளுவதற்காக இந்த தீய செயலை செய்ததற்காக அவர்

அழுதது, மூன்று தடவை மறுதலித்திருந்தும், அவரது இருதயம் தனது ஆண்டவரிடம் விசுவாசமாயிருந்ததை நிரூபித்தது. நம்மிடையேயும் இப்படியே இருக்கிறது. ஒரு சிறிய சோதனையை எதிர்க்கிறவன் அதன் மூலம் பெரிய சோதனையையும் தாங்கத் தக்கதாக தனது குணலட்சணத்தை பலப்படுத்துகிறான்.

சோதனைக்குள் நுழையாத ஞானத்தை விளக்குகிற கதை ஒன்று சொல்லப்படுகிறது. ஒரு வண்டி ஓட்டுனரை நியமிக்க ஒரு மனிதன் அநேக விண்ணப்பங்களை பெற்றான். அவன் அவர்களை தனது அலுவலகத்திற்கு அழைத்து அவன் இவ்வாறு கேட்டான். ''செங்குத்தான சரிவில் விபத்து ஏற்படாதிருக்க எவ்வளவு தூரம் நெருங்கி செல்வாய்?'' ஒருவன் ஒரு அடிதூரம் வரை தைரியமாக செல்வேன் என்றான். மற்றவன் ஆறு அங்குலம் வரை தைரியமாக செல்வேன் என்றான். இப்படியாக ஒவ்வொருவராக சென்னார்கள். கடைசியாக மற்றவர்கள் சொன்னதை எல்லாம் அமைதியாக கேட்ட ஒருவன், ''செங்குத்தான சரிவில் ஓரத்திற்கு சென்றால் எந்த அளவுக்கு பாதுகாப்பு இருக்கும் என்று தெரியாததால், நான் தூரத்திலேயே நிறுத்திவிடுவேன்'' என்றான். இவனுக்குத்தான் அந்த வேலை கிடைத்தது.

நாம் கடைபிடிக்க வேண்டிய கொள்கை இதுதான். சோதனையிலிருந்து மிக தூரமாக இருப்பவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள். தனது பலத்தையும் வல்லமையையும் மிக அதிகமாக நம்புகிறவர்கள் ஆபத்தின் விளிம்பிற்கு சென்று தவறிவிழுகிறார்கள். நாம் சோதனைக்குள் நுழையாதபடி ஜெபிப்போமாக. நாம் ஆபத்திலிருந்து விலகியிருக்கும்படி கவனமாகவும் விழிப்பாகவும் இருப்போமாக.

## உலக காரியங்களுக்காக ஜெபித்தல்

நமது ஆண்டவர் தமது கடைசி மாலை நேரத்தில் தமது அப்போஸ்தலர்களிடம் சொன்னதாவது: ''இது வரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்.'' (யோவான் 16:24) அவரது வாக்குத்தத்தம் நிறைவேறுதலுக்கு பார்த்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் நிச்சயம் இருக்கிறது. ஒரு சமயத்தில் நமது கர்த்தர் சொன்னதாவது: ''பூமிக்குரிய பெற்றோர்கள் நல்ல ஈவுகளை கொடுக்கும்பொழுது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுப்பது அதிக நிச்சயமல்லவா.'' (லூக்கா 11:13) பரிசுத்த ஆவியை கொடுங்கள்'' என்ற வார்த்தைகளை பயன்படுத்த வேண்டும் என்றோ, நல்ல எண்ணங்கொண்ட சில நண்பர்கள் பெந்தகொஸ்தே ஆசீர்வாதத்திற்காக ஜெபிப்பது போல நாம் ஜெபிக்க வேண்டும் என்றோ நமது ஆண்டவர் கூறவில்லை. ஆனால் நாம் சத்திய ஆவிக்காக, தெளிந்த புத்திக்காக, பரத்திலிருந்து வருகிற ஞானத்திற்காக ஜெபிக்க வேண்டும் என்று கூறினார்.

நம்முடைய காரியங்களை சரியானபடி நடத்த நமக்கு ஞானம் போதாது. நாம் போதிக்கப்பட்டிருக்கிறதாவது: ''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாக இருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும்.'' (யாக்கோபு 1:5) நம் வாயின் வார்த்தைகளும், நம் இருதயத்தின் தியானமும் தேவனுடைய சமூகத்தில் பிரியமாயிருப்பதற்கு தேவனுடைய ஊழியக்காரர்களாகிய நமக்கு இந்த ஞானம் விசேஷமாக தேவையானதாக காணப்படுகிறது. (சங்கீதம் 19:14)

நமது கர்த்தர் தமது சீஷர்களுக்கு போதித்ததாவது: ''என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். (இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்) இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார்.'' (மத்தேயு 6:31,32) நாம் உலகத்திலிருந்து வேறாக இருக்க வேண்டும் என்று குறிப்பதாக அவரது வார்த்தைகள் காணப்படுகிறது. அவர்கள் சிந்திக்கக் கூடிய ஆசீர்வாதங்களுக்காக–பல்வேறு வகையான உணவுகள், வீடுகள், பணம் மற்றும் என்னவெல்லாமோ கேட்டு ஜெபிப்பார்கள். ஆவிக்குரிய காரியங்களுக்காக ஜெபிக்க மாட்டார்கள். ஏனெனில் அந்த ஈவுகளை அவர்கள் உணரமாட்டார்கள். அவர்களைப் போல நாம் இருக்கக் கூடாது.

அப்படியென்றால் நமது கர்த்தர் தமது ஜெபத்தில், ''எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்'' என்று ஏன் கேட்டார்? இது ஜெபத்தில் முற்றிலும் வேறானதாக இருக்கிறது. நாம் விசுவாசம் உள்ளவர்களாயிருந்தால் அப்பமும் தண்ணீரும் நிச்சயம் உண்டு என்று கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். (ஏசாயா 33:16) நாம் நிகாரிக்கப்பட மாட்டோம். கர்த்தர் எல்லா நன்மைகளையும் கொடுக்கக் கூடியவர் என்று அங்கீகரிப்பதுதான் மிகவும் சரியானது. அவரது வாக்குத்தத்தத்தின்படி உணவுக்காகவும் உடைக்காவும் அவரை நோக்கிப்பார்க்கிறோம். நாம் எதைப் பெற்றிருந்தாலும் நாம் கர்த்தரை நம்பியிருக்கிறோம் என்பதை அங்கீகரிக்கிறோம். ஏனெனில் அவர் அதை நமக்கு கொடுக்கிறார். அவர் என்ன கொடுக்கிறாரோ, அதற்கு மேலாக நாம் வேறு எதையும் கேட்பதில்லை.

ஆவிக்குரிய வளர்ச்சியில் நாம் முன்னேறுகிற அளவுக்கு, குறைவாக நாம் கர்த்தரிடம் கேட்போம். இன்னும் அவரது ஞானத்தில் அதிக நம்பிக்கையும் அவரது வாக்குத்தத்தத்தில் அதிக விசுவாசமும் கொள்ளுவோம். நாம் அதிகமாக செய்ய வேண்டியது என்னவெனில், பூமிக்குரியவைகளுக்காக அந்த வாக்குத்தத்தங்களையும் அவைகளில் நமது நம்பிக்கையையும் குறிப்பிடுவது ஆகும். தமது சீஷர்களாக இருக்கும்படி நம்மை அழைத்திருக்கிறவரும், நம்மை தமது மேற்பார்வைக்கு கீழாக வைத்திருப்பவருமாகிய நமது கர்த்தர் சகலமும் நமது நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி பார்த்துக் கொள்ளுவார் என்பதில் நாம் உறுதியாய் இருப்போம். கிறிஸ்துவின் சரீர அங்கமாக இருக்கும்படி நம்மை அவர் அழைத்திருந்தால், உணவு குறைவோ வேறு எதுவோ நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப் படுத்துவதில் நம்மை தடைபடுத்தாது.

கர்த்தருடைய தூதன் சூழ பாளயமிறங்கப் பெற்றவர்கள் ஒரு வசீகரமான வாழ்க்கையை பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லப்படலாம். கர்த்தர் சபையை இயக்குகிறார். ஆகையால் அவரது அழைப்பின் நிபந்தனைகளை நாம்

ஒத்துக்கொள்ளுவதற்கான காலத்திற்கு முன்பே விபத்தினாலோ அல்லது வியாதியினாலோ நமது ஜீவனை எடுத்துக் கொள்ள அனுமதிப்பாரா என்பதை நினைத்துப் பாருங்கள்? நிச்சயமாக இல்லை! ஆகையால், ''மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.'' (மத்தேயு 4:4) தேவனுடைய வாக்குத்தத்தத்தில் நாம் நம்பிக்கை வைக்கிறோம். நாம் அவரிலும் அவரது வசனம் நம்மிலும் நிலைத்திருந்தால், நாம் கீழ்ப்படிதலில் உண்மையுள்ளவர்களாயிருந்தால், நம்மில் தெய்வீக நோக்கத்தை அவர் நிறைவேற்றுவார்.

ஆசிரியர் தனது குழந்தை பருவத்திலிருந்து தனது சரீர பலத்திற்காகவும் சுகத்திற்காகவும், கர்த்தரிடம் கேட்டதாக ஞாபகமில்லை என்கிறார். அவருக்கு சரீர பலம் அதிகமாக இருந்ததில்லை. அவருக்கு ஊழியம் பண்ண சந்தர்ப்பம் கிடைத்த பொழுது அவரது பலம் தேவைக்கும் குறைவாக இருப்பதாக காணப்படும். அப்பொழுது ஜெபத்தில் கர்த்தருக்கு முன்பாக சென்று, தனக்கு தேவையான பலத்தைக் கொடுக்கும்படி அல்லது அவருக்கு தேவையானது எது என்பதை கர்த்தர் காண்கிறதை கொடுக்கும்படி கேட்பதில் சந்தோஷம் அடைந்திருக்கிறார். அவரால் திருப்தியான செய்தியை அளிக்க முடியாது என்பதை தேவன் கண்டால், கர்த்தர் எந்த அளவுக்கு அனுமதித்திருந்தாலும் அது அவருக்கு சிறந்த அனுபவமாக இருக்கும் என்று அறிந்து, தன்னால் இயன்றதை செய்துவிட்டு மற்றவைகளை கர்த்தரிடம் விட்டுவிடுவார்.

இந்த மார்க்கம் போதுமானதாக இருந்திருக்கிறது. அவரது நாற்பது வருட தீவிர ஊழியத்தில் பலவீனத்தினால் ஒரு கூட்டத்தைக் கூட அவர் தவறவிட்டதில்லை. ''உன்னால் இன்றிரவு சரியாக பேச முடியாது'' என்று அவரது நண்பர் கூறிய அநேக சந்தர்ப்பங்கள் இருந்தன. கர்த்தர் எனக்கு பலம் கொடுத்தால், நான் கூட்டம் நடக்கும் இடத்திற்கு செல்வேன், பேசுவதற்கான பலத்திற்காக அவரை நம்புவேன்'' என்பதே அவரது வழக்கமான பதிலாக இருந்தது. ஒரு சமயம் மேடையில் கிட்டதட்ட மயக்கமடைந்துவிட்டார். ஆனாலும் அவரது கிருபை போதுமானதாக இருந்தது. அவர் திரையின் இந்த பக்கம் இருக்கும்வரை, அவர் செய்ய முடியாதிருக்கும் போனதை தவிர, சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் அவர் பேச உத்தேசம் உடையவராக இருக்கிறார். கர்த்தர், அவர் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்தால், தேவையான பலத்தையும் கர்த்தர் தந்தருளுவார்.

## ஜெபத்திற்கான சரியான விஷயங்கள்

''நீங்கள் தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறீர்கள்'' (யாக்கோபு 4:3) என்று பரிசுத்த யாக்கோபு அவரது நாளில் சொன்னதை நாம் ஞாபகத்திற்கு கொண்டு வரும்போது, நாம் என்ன கேட்கிறோம் என்பதில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

நமது ஜெபம் கேட்கப்படுவதற்கு நாம் அவரில் நிலைத்திருப்பதும் அவரது வார்த்தை நம்மில் நிலைத்திருப்பதும் அவசியம் என்பதை தமது அப்போஸ்தலருக்கு நமது கர்த்தர் போதித்தார். அவரது வார்த்தைகளாவன: ''நீங்கள் என்னிலும் என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்.'' (யோவான் 15:7) வேறு வார்த்தைகளில் சொல்லுவோமானால், கர்த்தருடைய சித்தத்திற்கு இசைவாக நாம் விண்ணப்பம் பண்ணினால் கேட்கப்படும். அவரது சித்தத்திற்கு மாறாக விண்ணப்பம் பண்ணினால் கேட்கப்படாது.

சுயநலத்துடன் பூமிக்குரியவைகளுக்காக ஜெபித்தால் அது உண்மையான ஜெபமல்ல. அநேக கிறிஸ்தவர்கள் கர்த்தர் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை ஒரு கடமையாக சொல்லுகிற வழியை பெற்றிருக்கிறார்கள். அதாவது ஒரு கூட்டத்தில் அநேகர் மனம் மாற்றப்பட்டு அவரிடம் வர வேண்டும், இப்படியாக இந்த கூட்டம் அபிவிருத்தி அடைய வேண்டும் முதலானவைகள். நமது ஜெபங்கள் இவைகளைக் காட்டிலும் மேன்மையான முறையில் இருக்க வேண்டும். மதகாரியங்கள் சாதாரணமான முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நாம் கர்த்தருக்கு பிரியமான முறையில் வாழ விருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர் கொடுத்தது குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் அதற்காக நாம் நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவன் கொடுக்க விரும்புகிற எதற்காகவும் நாம் ஜெபிக்கலாம் என்று யோசனை கூறப்படுவதே முழுவதும் சரியானதாக இருக்கிறது. நாம் பரிசுத்த ஆவிக்காக, அதிகமான அன்பிற்காக, அதிக பொறுமைக்காக, அதிகமான தயவுக்காக, பரத்திலிருந்து வருகிற அதிகமான ஞானத்திற்காக ஜெபிக்கலாம். சகலமும் நமக்கு நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி ஜெபிக்கலாம். ஏனெனில் அப்படி இருக்கும் என்று நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். கர்த்தரின் பார்வையில் மேன்மையான வழியில் நடத்தும்படி நாம் ஜெபிக்கலாம். ஆனால் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கக் கூடாது. ஏனெனில் பொதுவான காரியங்களில் அவரது சித்தம் என்ன என்பதை அறிய நமக்கு உபாயம் ஏதுமில்லை.

நமது கர்த்தர் ஒரு கடமையான முறையில் ஜெபிக்கவில்லை. அவரது விண்ணப்பத்தோடு அவர் கேட்டது, ''என்னுடைய சித்தத்தின்படியல்ல, உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது'' – எனக்கு சித்தம் ஏதுமில்லை; ஏனெனில் எனது சித்தத்தை நான் கைவிட்டுவிட்டேன். உமது சித்தத்தின்படி ஆவதே என் விருப்பம். இது முழுமையான தாழ்மையுள்ள ஒரு ஜெபம். அதற்கு நமது கர்த்தர் விசுவாசத்தோடு ஜெபிக்கவில்லை என்று அர்த்தமல்ல, அல்லது அவர் விரும்பியது கிடைக்காது என்றல்ல. பிதாவானவரின் சித்தத்தை அறிந்து கொள்ள விரும்புகிறார் என்பதே அதன் பொருள். இயேசு பாடுகளின் பாத்திரத்தில் கடைசி மட்டும், அடி வண்டல் மட்டும் பானம் பண்ண வேண்டும் என்பதே பிதாவானவரின் சித்தம் என்பதை அறிந்து கொண்டார்.

நாம் தாழ்மையானவர்களாக இருந்தால், நமது ஜெபமானது மேலும் மேலும் நன்றி கூறுதலாக ஆகும். நாம் ஆண்டவரின் அடிச்சுவட்டில் நடக்க மேலும் மேலும் விருப்பம் உள்ளவர்களாக இருப்போம். நாம் அவரிடம் எதையும் சொல்ல முயற்சிப்பதற்கு மேலாக, நம்மில் அவருடைய சித்தம் நிறைவேற விரும்புவோம். எல்லா காரியங்களும் அவரது திட்டப்படி தான் இருக்கும். அது நிறைவேறும். அதை அவர் நமக்காகவோ அல்லது உலகில்

வேறு யாருக்காகவோ மாற்றமாட்டார். இந்த கிறிஸ்தவ ஜீவியத்தை அபிவிருத்தியை அடைந்தவர்கள் இவரை அல்லது அவரை பாதுகாக்க வேண்டும் என்று ஜெபிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை உணருவார்கள். ஏனெனில் அவர் நியமித்த பாதையில் அவரிடம் வருகிற அனைத்து உலக ஜனங்களையும் பாதுகாப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணயிருக்கவில்லையா?

தர்சு பட்டணத்தான் சவுலை கவனியுங்கள். அவன் தேவனுடைய சித்தத்தை செய்ய நாடினான், ஆனால் குருடாக்கப்பட்டான். தேவன் நிஜமான உண்மைகளுக்கு அவரது கண்களை திறந்த பிறகு, அவர் சரியான வழியில் முன்னேறிச் சென்றார். அவர் சத்தியத்தை பெறுவதற்கு முன்பும் பின்பும் புனிதராக இருந்தார். ஆனால் அவர் வெளிச்சத்தை பெற்ற பிறகு, தேவனுடைய சித்தத்தை எப்படி மேன்மையாக செய்வது என்ற போதனையை பெற்றார். அவர் கர்த்தருடைய தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாக இல்லாதிருந்தால் இப்படிப்பட்ட ஒரு அனுபவத்தை பெற்றிருக்க மாட்டார்; அவர் மாயவித்தைக்காரன் சீமோனைப் போல நடத்தப்பட்டிருப்பார்.

## ஜெபத்திற்கான பதில் நமது நன்மைக்காக தாமதபடுத்தப்படுகிறது

கிறிஸ்தவ ஜனங்களுக்கிடையே ஜெபத்தில் பிடிவாதமாக இருந்து யாக்கோபு தேவதூதனிடம் செய்தது போல மல்லுகட்டுவது ஊக்குவிக்கப்படுகிறது. இந்த ஜனங்கள் இவ்வளவு அதிகமாக அடிக்கடி ஜெபிக்கிறவர்கள், அது அவர்களுக்கு நஷ்டமாக ஆவதை ஆராய்வதில்லை. தேவனுக்கு முன்பாக நம்மை உத்தமனாக நிறுத்தும்படி ஆராய வேண்டும் என்றும் (2 தீமோத்தேயு 2:15)அற்புதமான காரியங்களை தேடக்கூடாது என்றும் புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும் என்றும் நமக்கு வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. இந்த முறையில் ஜெபிக்கிற ஜனங்கள் எலியா காலத்தில் பாகாலின் தீர்க்கதரிசிகள் செய்தது போல செய்கிறார்கள். அந்த மனிதர்கள் தங்களை கற்களால் கீறிக் கொண்டும் தங்கள் தேவனை நோக்கி தங்கள் பலியை ஏற்றுக் கொள்ளும்படி பலிபீடத்திற்கெதிரே குதித்தார்கள். (1 ராஜாக்கள் 18:26–29)

அதற்கு மாறாக, எலியா தீர்க்கதரிசி மிக அமைதியாக இருந்தார். புத்தியுள்ள தேவனை அவர் ஆராதித்தார். அவரது கவனத்தை திருப்ப கத்த வேண்டிய அவசியமில்லாதவர். எலியாவுக்கான நேரம் வந்தபோது, சில வார்த்தைகளை மாத்திரம் பயன்படுத்தி, நேரடியாக விஷயத்திற்கு சென்றார். (1 ராஜாக்கள் 18:36–38)

இந்த விவரங்களில் கிறிஸ்தவர்களுக்கான ஒரு பாடம் இருக்கிறது. தெய்வீக குணலட்சணத்தையும் திட்டங்களையும் பொதுவாக அறியாதவர்கள், ஜெபிக்கக் கூடாததற்காக ஜெபிப்பார்கள். கேட்க வேண்டிய சரியான காரியங்களை ஒதுக்குவார்கள். நாம் கர்த்தரிலும் அவரது வார்த்தை நம்மிலும் நிலைத்திருந்தால், நாம் எதைக் கேட்க வேண்டும் என்பதை அறிந்திருப்போம். தகாததை கேட்காதபடிக்கும் தகுதியானதை கேட்கவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஒருவருடைய ஜெபம் கேட்கப்படாததாக காணப்பட்டால், மனந்தளர்ந்து ஜெபிப்பதை விட்டுவிடக்கூடாது. சோர்ந்து போகாமல் நாம் ஜெபம் பண்ண வேண்டும் என்று நமது கர்த்தர் கூறுகிறார். (லூக்கா 18:1–8) நமது பரம பிதாவானவர், அவரது ஆசீர்வாதங்களை நாம் உணர்ந்து கொள்ளும்படியான மனநிலைமைக்கு நம்மை கொண்டு வருவார். நமது உயர்ந்த நன்மைக்காக நமது ஜெபத்திற்கான பதில் காலதாமதம் ஆவது தேவனுடைய சித்தமாக இருக்கலாம்.

முப்பத்தி ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு, ஆபிரகாமிடம் தேவன், அவர் கானான் தேசத்தை பெறுவார் என்றும் அவருடைய சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் வாக்குத்தத்தம் பண்ணினார். அந்த வாக்குத்தத்தம் இன்னும் நிறைவேறவில்லை. (அப்போஸ்தலர் 7:5) பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக, ''உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக'' என்று ஜெபித்து வருகிறோம். கர்த்தர் இந்த ஜெபத்திற்கு இன்னும் பதிலளிக்கவில்லை. எனினும் இன்னும் நாம் அந்த ஜெபத்தை தொடர்ந்து செய்து காத்திருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று விசுவாசிக்கிறோம். ''நான்...... எழும்பும் நாள் மட்டும் எனக்கு காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.'' (செப்பனியா 3:8)

கர்த்தருடைய வழியில் தங்கள் இருதயத்தை சந்தோஷம் மூட்டுகிறவர்கள் அனைவருக்கும் மாபெரும் ஆசீர்வாதம் வைக்கப்பட்டிருக்கிறது. அவரது கிருபையான வாக்குத்தத்தத்திற்கு நாம் ஒத்திருக்கிறோம். நாம் காத்திருந்து ஜெபிக்கிறோம். விரைவில் தமது சொந்த தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்காக இந்த யுக முடிவில் பழிவாங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர் அவர்களை மாம்சம் மற்றும் சத்துருவின் எதிர்ப்புகளிலிருந்தும் விடுவிப்பார். அவர் அவர்களை உயர்த்தி, அவர் வாக்குத்தத்தம் பண்ணினபடி ஆசீர்வாதங்களை அவர்கள் மேல் பொழிவார். பிறகு ஜெபங்கள் கேட்கப்படும். இதற்கிடையில் ஜெபமானது நம்பிக்கையுடனும் ஊக்கத்துடனும் தொடர்ந்து செல்ல வேண்டும்.

''ஒருவரது ஜெபத்தை சொல்வதற்கும்,'' ஜெபிப்பதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு, ஜெபத்தில் சில குறிப்பிட்ட விண்ணப்பங்கள் இருக்க வேண்டும். அதற்கான பதிலை புத்திசாலிதனத்துடன் எதிர்பார்ப்போம். ஒரு சகோதரன் தனது சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் செயல்களை ஆழ்ந்து பரிசோதனை செய்து கட்டியெழுப்புவதற்கு எப்படிப்பட்ட குணலட்சணம் தேவை என்பதை கவனிக்கும் பொழுது பொறுமை தேவை என்ற தீர்மானத்திற்கு வந்தார். சில காலத்திற்கு பிறகு அவர் எழுதியதாவது: ''காரியம் என்னவென்று ஆச்சரியப்பட்டேன். அதிகமான பொறுமைக்காக நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஆனால் எனது சோதனைகள் எல்லாம் என்னுடைய பொறுமையை குறைவாகவே வளர்ப்பதாக இருந்தது. இந்த வழியில் பொறுமைக்கான எனது ஜெபத்திற்கு கர்த்தர் பதிலளித்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் இந்த சிறப்பான குணம் என்னில் அபிவிருத்தி அடையும் நோக்கத்துடன் இந்த சோதனைகளை அவர் அனுமதித்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் சமீப காலத்தில் தான் நான் காண ஆரம்பித்தேன்.''

இந்த அனுவம், ''தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்'' (எபேசியர் 6:13) என்கிற அப்போஸ்தலரின் புத்திமதிக்கு இசைவாக இருக்கிறது. நமது ஜெபம் என்னவாக இருந்தாலும், நம்முடைய விண்ணப்பங்களுக்கு எப்படி பதிலளிக்கிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். இந்த மனோநிலை தான் நமது விசுவாசம் நம்பிக்கை மற்றும் உண்மையாயிருத்தல் ஆகியவைகளை விளக்குவதாக இருக்கும். இதனால் முறைப்படி நமது விசுவாசம் பலப்படுத்தப்படும். நாம் கர்த்தரில் நம்பிக்கையாக இருப்பதால் நாம் அவருக்கு பிரியமாக இருப்போம். நாமே செய்வதைக் காட்டிலும் மேன்மையான வழியை நாம் எடுக்கிறோம் என்பதை அவர் அறிகிறார். நாம் எதிர்பார்த்திராத சில காரியங்கள் நமது வாழ்க்கையில் வந்தால், ''நாம் பொறுமை, கீழ்ப்படிதலை கற்றுக் கொள்ளக் கூடிய ஒரு பாடம் இதில் இருக்கிறது'' என்று நாம் நினைக்க வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்கள், சந்தோஷத்தின் நிறைவை பெறுவதற்காக நாம் அவரிடம் கேட்க சலுகை பெற்றிருக்கிறோம். இந்த சந்தோசத்தையும், ''எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தையும்'' பெற்றிருக்கிறோம். பரிசுத்த ஆவி வசனத்தின் மூலம் வெளிப்படுத்துகிறதும் பிதாவானவர் நமக்காக வைத்திருக்கிறதுமான மகிமையான காரியங்களின் நம்பிக்கையில் நாம் மிக அதிகமாக களிகூருகிறோம். மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்தவன் நன்றியுள்ள கிறிஸ்தவன். தனது வாழ்க்கையை சரியானபடி பயன்படுத்துகிறவன் தான் நன்றியுள்ள கிறிஸ்தவன், நன்றியறிதலை அப்பியாசப்படுத்துகிறதினால் ராஜ்யத்துக்கு நன்கு தயாரானவனாக அவன் இருப்பான். குறைவாக நன்றியுள்ளவன் ராஜ்யத்தை அடையலாம் என்று நாம் கொஞ்சம் அறிகிறோம். ஆனால் நன்றியில்லாத இருதயம் ராஜ்யத்தை பெறாது.

## ஜெபத்திற்கான சூழ்நிலை

''இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்,'' என்பதும் ''ஜெபிப்பத்தை நிறுத்தாதீர்கள்'' என்பதும் ஒரே அர்த்தமுடையதாக இருக்கிறது. ஒருவர் எதிர்பார்க்கிற மனோபாவத்தில் இருந்தால் விண்ணப்பம் தொடர்கிறது. ஏதாவது ஒரு வழியில் அந்த விண்ணப்பம் இன்னும் பதிலுக்காக காத்திருக்கலாம். இந்த யோசனை நீதிமன்றத்தில் நிறைவேற்றப்படுகிறது. குறிப்பிட்ட வழக்குகளில் இந்தந்த கஷ்டத்திலிருந்து இந்தந்த விடுதலை வேண்டும் என்று விண்ணப்பம் பண்ணுவது வழக்கு மன்றத்தின் முறையாக இருக்கிறது. அந்த வேண்டுகோள் திரும்ப பெற்றுக் கொள்ளலாம் அல்லது தொடரலாம். பரலோக மன்றத்தில் நாம் கேட்கும் ஜெபமும் இதே போலதான். நாம் விண்ணப்பம் பண்ணியிருக்கிறோம், நாம் கேட்டது மதிப்புள்ளதாக இருந்தால், நாம் காத்திருப்பது நல்லது.

அதிகமாக பேசி விண்ணப்பம் பண்ணினால் தங்கள் ஜெபம் கேட்கப்படும் என்று நினைக்கிற புறஜாதிகளைப் போல நாம் இருக்கக்கூடாது. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை நாம் தேட வேண்டும். நம்முடைய ஜெபம் அதற்கு ஒத்ததாகத் தான் இருக்க வேண்டும். நாம் பெறுகிற பூமிக்குரிய அனுபவம் எதுவாக இருந்தாலும், சுவிசேஷத்தின் பரலோக காரியங்களை அடைவதற்கு உதவியாக இருக்க வேண்டும். பரலோக பிதாவானவர் பார்க்கிறார். நாம் இரும்புச் சட்டத்திற்கு பிணைக்கப்படாதிருந்தாலும், நாம் ஜெபம் பண்ணுவதை நிறுத்தக் கூடாது. தேவன் நம்மை ஜெபிக்கும்படி கட்டளையிடவில்லை. ஏனெனில் அது உறுதியான சட்டமாக இருக்கும். கீழ்ப்படியவில்லை என்றால் பாவமாகும். ஆனால் கேட்கிறவர்களை அவர் ஆசீர்வதிப்பார் என்று நாம் விசுவாசிக்கிறோம். தேவையை நாம் எவ்வளவு அதிகமாக உணருகிறோமோ, அவைகளை பெறும்போது, அந்த அளவுக்கு அதிகமாக மெச்சுகிறோம். வெகுமதிகளை (ஈவுகளை) அடிக்கடி சென்று கேட்பதினால், கர்த்தர் இந்த வெகுமதிகளை நாம் மெச்சும்படி பண்ணுகிறார். பிறகு அவைகள் நம்மிடம் வரும்போது, அவைகளை பெற்று நல்லபடியாக பயன்படுத்தும் ஒரு நிலைமையில் இருக்கிறோம்.

நன்றி சொல்லுவதற்கு நமக்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. நன்றி கூறுகிற இருதயம் நன்றியுள்ள மனோபாவத்தை மேலும் மேலும் காணும். முதலில் நாம் நன்றி சொல்ல ஆரம்பிக்கும்போது, மிகவும் சந்தோஷமான காரியங்களுக்குச் செய்கிறோம். நமது அனுபவம் பெருகப் பெருக, இன்னல்கள் மற்றும் வாழ்க்கையின் துன்பங்களிலும் சந்தோஷத்தைக் காண்போம். ஏனெனில் இந்த அனுபவங்கள் நமது இருதயத்தை சீர்படுத்தி, தவறுக்கு எதிராக நல்லதற்கும் பிழைகளுக்கு எதிராக சத்தியத்திற்கும், அசுத்தத்திற்கு எதிராக சத்தியத்திற்கும் அதிகமாக இடமளிக்கக் கூடியதாக மாற்றுகிறது.

நாம் முறையாக அடிக்கடி ஜெபிக்கிறவர்களாக மாத்திரமல்ல, நாம் எப்பொழுதும் ஜெபம் பண்ணும் மனோபாவத்தில் இருக்க வேண்டும். ஒவ்வொரு குழப்பத்திலும் ஒவ்வொரு அனுபவத்திலும் தெய்வீக வழிகாட்டுதலுக்காக கர்த்தரை நோக்குகிற இருதய மனோபாவத்தில் தேவனுடைய பிள்ளைகள் இருக்க வேண்டும். காந்த முள் துருவங்களை நோக்கியிருப்பதுபோல நமது இருதயங்களும் கர்த்தரை நோக்கி இருக்க வேண்டும். நமது வழிப்பாதையில் வலியோ, தொந்திரவோ, கஷ்டமோ இருந்தால் நாம் அவரை நோக்கவேண்டும். கர்த்தருக்கு ஊழியம் செய்யும் சலுகை இருந்தால் கர்த்தரிடம் திரும்பி உதவி கேட்காமல், ஊழியம் பண்ண நமக்கு தகுதியிருக்கிறது என்று நாம் நினைக்கக் கூடாது. வேறு வார்த்தைகளில் சொல்லுவோமேயானால், கிறிஸ்தவனின் ஜெபம் நாளின் ஆரம்பத்தில் ஏறெடுக்கப்படுவது மட்டுமல்ல, ஜெப சூழ்நிலை அவனைச் சுற்றி தொடர்ச்சியாக இருக்க வேண்டும். இது வெறும் கடமையாக மாத்திரமல்ல, மாபெரும் சலுகையினை சரியான உணருதலாகவும் இருக்க வேண்டும்.

கர்த்தரை சரியாக உணர்ந்தவர்கள் இந்த சலுகை இல்லாமல் இருக்க முடியாது. இந்த சலுகையை சரியாக உணர்ந்தவர்கள், ஒரு நாளில் அனேகந்தாம் பரலோக பிதாவானவரிடம் செல்வதில் களிகூருவார்கள். இடுக்கமான பாதையில் நடக்க நாடுகிறவர்கள் அனைவருக்கும் நமது புத்திமதி என்னவென்றால், அவர்கள் இந்த சலுகையை மறக்கக் கூடாது என்பது தான். ஆனால் அவர்களது குடும்பத்தில் அல்லது அவர்களது அறைகளில் அறை நண்பர்களுடன், ஜெபமானது நியாயமானதாக, சரியானதாக, அவர்களது தீர்மானத்தின்படி சந்தோஷப்படுத்துவதாக இருக்க வேண்டும், அத்துமீறுவதாக இருக்கக் கூடாது.

## ஜெபத்தினால் விசுவாசம் பலப்படுத்தப்படுகிறது

ஒருவருடைய ஜெபங்கள் மற்றவருக்கு எப்படி அநுகூலமாக இருக்கிறது என்பதை நாம் அறியாதிருக்கலாம். அதை நாம் ஆழ்ந்த வேதாந்த கொள்கையாக்க நமக்கு போதுமான தகவல்கள் இல்லை. மின் சக்தி ஒரு நிலையத்திலிருந்து இன்னொரு நிலையத்திற்கு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் தொடர்ந்து செல்லுவதைப் போல குறிப்பிட்ட மனரீதியான சக்திகள் ஒருவரிடமிருந்து மற்றவரிடம் போகலாம் என்று நாம் அனுமானிக்கலாம். மனதின் சக்திகள் அறியக்கூடாதவைகள். நம்மை நாமே வசீகரிக்கலாம்; ஒரு குறிப்பிட்ட அளவு மற்றவர்களை, நாம் வசீகரிக்கலாம். ஒரு மனது வார்த்தை இல்லாமல் கருத்தறிவிக்கும் சக்தியால் இன்னொருவரை வசீகரிக்கலாம். ஏன் தேவன் இதை அனுமதிக்கிறார் என்பதையும் ஜெபத்திற்கு பதிலளித்து ஆசீர்வாத்தை தருகிறார் என்பதையும் நாம் சொல்ல இயலாது. நாம் அதை வேதாந்த கொள்கைக்கு, சிந்தனைக்கு விட்டுவிடுவோம்.

நாம் கிறிஸ்துவின் பள்ளியில் இருந்தால், அங்கே நாம் போதிக்கப்பட்டு வாழ்க்கையின் சில பாடங்களை நாம் கற்றுக் கொள்ளுகிறோம். அந்த பாடங்களில் ஒன்று முழுமையான, சரியான விசுவாசம், முழுமையான நம்பிக்கை ஆகும். அப்படிப்பட்ட நம்பிக்கை, நமக்காகவும் அதே போல மற்றவர்களுக்காகவும் நமது ஜெபங்களினால் வளர்க்கப்படுகிறது. இந்த ஜெபங்களை ஆசீர்வதிக்க தேவன் பிரியமாயிருக்கிறார். இப்படியாக நமது விசுவாசத்தை வளர்த்து, பலப்படுத்தவும் பிரியப்படுகிறார். நாம் சில முக்கியமான காரியங்களுக்காக ஜெபிக்காதிருப்பதினால், அதை தேவன் நடத்தாமல் விட்டுவிடுவார் என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. அல்லது அதை எதிர்பார்த்ததால்தான் ஜெபத்தின் மூலம் கிடைக்கும் என்று நினைக்கக் கூடாது. ஆனால் ஆசீர்வாதமானது ஒன்றின் வழியாக இன்னொன்றிற்கு வரும். நமது ஜெபம் மற்றும் ஒத்துழைப்புடனோ அல்லது நமது ஜெபமும் ஒத்துழைப்பும் இல்லாமலோ எதையும் தேவன் ரத்து செய்து அவர் ஆசீர்வாதத்தை கொடுக்க வல்லவராயிருக்கிறார்.

நாம் மற்றவர்களுக்காக ஜெபிக்கும்போது, நமது ஜெபம் பயன்படும் என்று நாம் நம்புவதற்கு காரணங்கள் உண்டு, ஜெபங்கள் மிகவும் குறிப்பிடத்தகுந்த வகையில் பதிலளிக்கப்பட்டதற்கான உதாரணங்களை நாம் பெற்றிருக்கிறோம். கர்த்தருடைய வார்த்தை நம்மில் விசுவாசத்தை பதியவைக்கிறதாக காணப்படுகிறது. தேவனுடைய ஜனங்கள் ஜெபத்தின் ஜனங்களாக இருந்திருக்கிறார்கள். ஜெபம் இல்லாமல் எப்படி ஒருவர் கிறிஸ்துவின் உறுதியான பின்னடியாராக இருக்க முடியும் என்று எங்களால் நினைத்து பார்க்க முடியவில்லை

### யாருக்காக நாம் ஜெபம் பண்ணலாம்?

உடல் நலத்திற்காக சுவிசேஷ யுகத்தில் திட்டமில்லாமல் ஜெபம் பண்ணுவது சரியானதாக இருக்காது என்று நாங்கள் புரிந்துகொள்ளுகிறோம். அற்புத சுகமளிக்கும் வரத்தினால் தான் ஆதிகால சபையில் சுகமளித்தல் நடந்தன. அதன் நோக்கத்தை நிறைவேற்றின பிறகு, அப்போஸ்தலரின் மரணத்தோடு இது முடிவுக்கு வந்தது. வியாதி சம்பந்தமாக சரியான ஜெபம் பரிசுத்தவான்களால் பாவ மன்னிப்பிற்காக ஏறெடுக்கப்பட்டு, அதன் பலனால் சுகம் கிடைத்தது. முடிந்து வருகிற சுவிசேஷ யுகத்தின்மேல் ஆரம்பிக்கிற ஆயிர வருட யுகமானது ஒன்றின்மேல் ஒன்றாக இருக்கிறதை நாம் பார்க்கிறோம். சுகமாகுதலும் பொதுவான இழந்ததை திரும்ப பெறுதலும் ஆரம்பம் வெளிப்படுத்தலை நாம் எதிர்பார்க்க வேண்டும். முன்னமே ஆராய்ந்த வேதாகம போதனையின் வெளிச்சத்தில், ஆயிர வருட யுக விடியலின் வெளிச்சத்தில் நாம் யாருக்காக ஜெபிக்கலாம் என்று கேட்கிறோம்?

நாங்கள் பதிலளிக்கிறோம்: பரிசுத்தவான்கள் இப்பொழுது தங்கள் சொந்த நலனுக்காக ஜெபிக்க முடியாது. நாம் அர்ப்பணம் செய்திருக்கிறபடியால் இழந்ததை திரும்ப பெறுதலையும் நாம் கேட்க முடியாது. அல்லது களைப்பு, சோர்வு, அடிகள் அல்லது வியாதி இவைகளை அற்புதவிதமாக நீக்கி அவர்களது பலிகளை ரத்து செய்யும்படி கேட்க முடியாது. ஆனால் தங்களுக்கு வந்திருக்கிற துன்பங்கள் எல்லாம் தங்களது பாவத்தின் தண்டனைகள் என்று உணர்ந்தால், ஒருவருக்கொருவர் பாவத்தை மன்னித்து, தேவனிடம் பாவங்களை மன்னிக்கும்படி ஜெபிக்கலாம். இப்படியாக இதன் பலனால் அவர்கள் குணமடையலாம்.

அவர்கள் ஆண்டவரிலும் அவரது வார்த்தைகள் அவர்களிலும் நிலைத்திருக்கப் பெற்றிருக்கிற பரிசுத்தவான்கள் தங்களுக்காக ஜெபிப்பதைக் காட்டிலும் மற்றவர்களுக்காக ஜெபிக்கலாம். ஏனெனில் நாம் இளைப்பாறுதலின் காலங்களின் ஆரம்பத்தில் இருக்கிறோம். இது தங்களை உயர்த்திக் கொள்வதற்காக அல்ல; அவர்களது விருப்பம் வியாதியஸ்தர்கள் சுகமடைய, சுயநலத்திற்காக அல்ல. திரும்பப் பெற்ற உடல் நலம் நல்ல ஊழியத்திற்கும் தேவனுடைய மகிமைக்கும் அர்ப்பணிக்கப்படும் என்று நம்பிக்கை கொள்ள அவர்களுக்கு காரணம் இருக்கிறது.

இப்படிப்பட்ட சமயத்தில் துன்புறுகிறவர்களுக்கு அல்லது சித்த சுயாதீனம் இல்லாதவர்களுக்கு வேண்டுகோளின் பேரில் விடுதலைக்காக ஜெபிக்கலாம். பலியாளர்களுக்கோ, ராஜரீக ஆசரியர்களுக்கோ அர்ப்பணம் செய்த சிறுமந்தைக்கோ அல்ல. இப்படிப்பட்ட சமயத்திலும் கூட, நமது விசுவாசம் பலமுள்ளதாக இருக்க வேண்டியிருந்தாலும், நல்ல நோக்கத்தோடு நம்பிக்கையோடு கேட்டாலும், இளைப்பாறுதலின் ஆசீர்வாதத்தின் ஒரு ஆரம்பத்தை வழங்க கர்த்தர் சந்தோஷப்படும்போது, நமது ஆண்டவர் தமது ஜெபத்தில் செய்தது போல ''என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது'' (லூக்கா 22:42) என்று நாம் எப்பொழுதும் சொல்ல வேண்டும்.

எனினும் பொதுவான குணமாக்குதலும் இளையப்பாறுதலின் வேலையும் இன்னும் எதிர்ப்பார்க்க வேண்டிய காலமாக இருக்கிறது. ஏனெனில் அனைத்து ஆசாரியத்துவமும் பலியை நிறைவேற்றி, தங்களது தலையானவரும், பிரதான ஆசாரியருமான இயேசுவுடன், மகா பரிசுத்த ஸ்தலத்தினால் நிழலாக காண்பிக்கப்பட்ட பரலோக நிலைமை அல்லது சுபாவமாகிய மகிமை மற்றும் பூரணத்திற்குள் நுழையும் வரை இந்த காலம் வராது.

### ராஜாக்கள் மற்றும் அரசாங்கங்களுக்கான ஜெபம்

தீமோத்தேயுக்கு பரிசுத்த பவுல் எழுதின நிரூபத்தில் அவர் கூறுகிறதாவது: ''நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்திமதி என்னவெனில் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும் வேண்டுதல்களையும்

ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். நாம் எல்லா பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்.'' (2 தீமோத்தேயு 2:1,2) இந்த உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருடைய ராஜ்யம் அல்ல என்று மற்ற வேதவாக்கியங்கள் தெளிவாக கூறுகின்றன. (லூக்கா 19:11,12) தற்கால முறைமைகள் அல்லது காரியங்கள் அனைத்தும் சாத்தானின் மேற்பார்வையின் கீழே நடைபெறுகின்றன என்ற உண்மையை உலகம் உணர்ந்து கொள்ளாது என்று மறைமுகமாக அவைகள் நமக்குச் சொல்லுகின்றன. (மத்தேயு 4:8,9; யோவான் 14:30) குறித்த காலத்திற்கு முன்பாக கர்த்தர் தமது நீதியின் ராஜ்யத்தை ஸ்தாபிக்க மாட்டார் என்றும் கூறுகின்றன. அந்த காலம் வரும்போது, சகல ராஜாக்களும் ஆசாரியர்களும் ஜனங்களும் அவருக்கு ஊழியம் செய்து கீழ்ப்படிவார்கள். (தானியேல் 7:27) அவரது ஆளுகை சகல ஜாதிகளாலும் விரும்பப்படத்தக்கதாக இருக்கும்.

இடைக்காலத்தில் இந்த தற்கால ராஜ்யங்கள் இந்த நிலைமைகளின் கீழ் தங்களால் என்ன செய்ய முடியும் என்பதை பார்க்கும்படி சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (தானியேல் 2:37–44) இஸ்ரயேலின் நிழலான ராஜ்யம் நீக்கப்பட்டு, நேபுசாத்நேச்சாருக்கு ராஜ்யபாரம் கொடுக்கப்பட்டபோது தன்னுடைய ராஜ்யத்தால் என்ன செய்ய முடியும் என்பதை காண்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதற்காகவேயாகும். அது நீதியானதாக அல்லது அநீநியானதாக இருக்கலாம். ஆகையால் அது நேபுகாத்நேச்சார் மூலம் பின் வந்த ராஜ்யங்கள் அவைகள் எல்லாம் புறஜாதி ராஜ்யங்கள், தேவனுடைய பிரதிநிதிகள் அல்ல. இந்த சகல பலவிதமான ராஜ்யங்களும் பல்வேறு கொள்கைகளை விளக்குகின்றன. மனுக்குலமானது இந்த ராஜ்யங்களின் கீழ் அனுபவ பாடங்களை கற்றுக் கொள்ளுகிறது. அது எதிர்காலத்தில் மதிப்புடையதாக இருக்கும். இந்த ராஜ்யங்களின் கீழ் மனிதர் தங்களது உரிமைகளுக்காக போராடுவதை நாம் பார்த்திருக்கிறோம். சமயத்துக்குதக்கதாக, சில சமயங்களில் அவர்கள் வெற்றி பெறுவார்கள், சில சமயங்களில் தோல்வியடைவார்கள். பல்வேறு யுத்தங்களில் நீதியும் அநீதியும் போராடுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் எல்லாவற்றிலும் கொள்கை ஆட்சி செய்கிறது.

மனுக்குலத்தை தாக்குகிற கஷ்டங்களை அபூரண மனிதனின் அரசாங்கம் எதுவும் சரிபடுத்தக் கூடாததாக இருக்கிறது என்பதைத்தான் சகல ராஜ்யங்களும் மெய்ப்பித்து காட்டியிருக்கின்றன. நம்மால் பாவம், துக்கம், அழுகை மற்றும் மரணத்தை நீக்க முடியாது. ஒரே ஒரு ராஜா அல்லது ஒரே ஒரு தேசம் மனுக்குலத்துடன் பரீட்சித்து பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறதால், மற்ற தேசங்கள் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருந்தால் வெற்றிகரமாக இருந்திருக்குமா இருந்திருக்காதா என்பதை நாம் அறிந்திருக்க மாட்டோம். ஒவ்வொரு தேசமும் சர்வதேச அதிகாரத்தை நாடுகிறது. ஒவ்வொருவரும் தாங்கள் தான் மேன்மையான அரசாங்கத்தை உடையவர்களாக இருக்கிறோம் என்று கூறிக்கொள்ளுகிறார்கள். உதாரணத்திற்கு, அமெரிக்க அரசாங்கம் பிலிப்பினோஸ் நாட்டினருக்கு உயர்ந்த அரசாங்கத்தை கொடுக்க விரும்புகிறது. மகா பிரிட்டன் தென் ஆப்பிரிக்காவுக்கு உயர்ந்த அரசாங்கத்தை கொடுக்க விரும்புகிறது. நாகரீகமடைந்த மொழியினரும் நாகரீகம் குறைந்த நாட்டினருக்கு என்ன செய்கிறார்கள்? நிலைமைகளை உயர்த்த அவர்களால் என்ன செய்ய முடியும். இந்த அனைத்து நாடுகளிலும் அவர்களது அனைத்து முயற்சிகளிலும் சுயநலமே ஆதிக்கம் செலுத்துகிறது.

## அதிகாரம் சுயநலத்திற்கு பயன்படுத்தப்படுகிறது

ஒரு தேசம் மற்ற தேசங்களை ஆசீர்வதிக்க அதிகாரம் பெற்றிருந்தால், தாங்கள் எந்த அனுகூலத்தையும் அவர்களிடமிருந்து பெறாதபடி அவர்களை ஆசீர்வதிக்க மாட்டார்கள் என்ற உண்மை மெய்ப்பித்து காட்டப்பட்டதை நாம் காண்கிறோம். நாகரீகமடைந்த நாடுகள் புறதேசங்களில் தங்களது அதிகாரத்தை சுய நலமான வழியில் பயன்படுத்தி தங்களது சக ஜீவிகளிடம் பணத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். உயர்ந்த நிலைமைக்கு அவர்களை வழி நடத்துவதற்கு பதிலாக, காரியங்கள் அங்கே வியாபார ரீதியிலே நடைபெறுகின்றன. மற்றவர்களிடமிருந்து அனுகூலத்தை எடுத்துக் கொள்ளுகிறவர்களும் பயத்தினால் அனுகூலத்தை எடுக்கப்பெறுகிற ஜனங்களும் இந்த அனுபவங்கள் மூலம் அனைவரும் சில நல்ல பாடங்களை கற்றுக் கொள்ளுகிறார்கள்.

இந்த பல்வேறு பாடங்களை தேசங்கள் கற்றுக் கொள்ளும்படி தேவன் அனுமதித்துக் கொண்டிருக்கிறார். அதன் பிறகு அவர் தமது மகிமையும் வல்லமையுமான ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். அவர் தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பொழுது அதற்கும் மற்ற சகல அரசாங்கங்களுக்கும் இருக்கும் வேறுபாடுகள் குறிக்கப்பட்டு ஒரு மாபெரும் தொடர்பை கற்றுக் கொள்ளுவார்கள். அநீதியினால் பாதிக்கப்பட்ட அநேகர், அந்த ராஜ்யம் வரும்போது அது மேன்மையான அரசாங்கம் என்பதை உணர்ந்து கொள்ள மிகவும் தயாராகி இருப்பார்கள்.

இதற்கிடையில், மேசியாவின் சரீர அங்கங்களாக அழைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகள், ''இந்த ராஜ்யங்கள் எல்லாம் நன்றாக செய்யவில்லை, எங்களது ராஜ்யம் இதை காண்பிக்கும்'' என்று சொல்லமாட்டார்கள். மாறாக, நாம் உற்சாகமூட்டும் வார்த்தைகளைக் கூற வேண்டும்: ''உங்கள் தேசம் தங்களால் முடிந்த அளவுக்கு நன்றாக செய்வதாக காணப்படுகிறது. அது அதிகமான புத்திசாலித்தனம் கிடைப்பதால் நல்ல ஒரு அரசாங்கத்திற்காக பாடுபடுகிறது.''

## அதிகாரத்தில் உள்ளவர்களுக்காக அனுதாபம்

புது ராஜ்யத்தை சேர்ந்தவர்களாகிய நாம் வெளிநாட்டில் பிரஜைகளாக இருக்கிறோம். இந்த உலகின் நிலைமைகளால் வசீகரிக்கப்பட்டவர்களாக நாம் காணப்படுகிறோம். நாம் மனுக்குலத்திடம் அனுதாபம் உள்ளவர்களாக இருக்கிறோம். புது யுகம் வருகிறதால் நாம் சந்தோஷம் அடைகிறோம். நன்மை செய்ய வேண்டும் என்று பாடுபடுகிறவர்கள் கடினமான வேலையை பெற்றிருக்கிறார்கள். அந்த வேலையை அவர்கள் நம்மிடம் கொடுத்தால் அது நமது முழு நேரத்தையும் எடுத்துக் கொள்ளும். தற்கால தீங்கான நிலைமையில் அவர்கள் செய்வதைதக் காட்டிலும் மேலாக நம்மால் செய்ய முடியாது. நாம் ராஜாக்கள் மற்றும் பிரபுக்கள் மேல் நாம் மாபெரும் அனுதாபத்தை உடையவர்களாக இருக்கிறோம். அவர்கள் ஒவ்வொரு திசையிலும் பாவத்துடன் நிறைவேற்ற நன்றாக செய்வார்கள்.

நமது அனுதாபம், அவர்களை நமது மனதில் தயவாய் கவனிக்க நம்மை வழிநடத்தும், தேவன் சிறப்பாக காணும்படி நாம் அவர்களுக்காக ஜெபிக்கலாம். அவர்கள் வியாதிப்பட்டால் அவர்கள் சுகமாகும்படி அவர்களுக்காக ஜெபிக்கும்படி அந்த அனுதாபம் நம்மை வழிநடத்தாது. ஆனால் நமக்கு உதவி செய்ய சந்தர்ப்பம் கிடைத்தால், நாம் அதை பயன்படுத்தலாம். ஆனால் அதன் பலனைப் பொறுத்தவரையில் அது தேவனுடைய கையில் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாம் முடிந்த வரை உதவி செய்யலாம். நாம் குறிப்பாக சொல்லாதபடி, இந்த ராஜ்யங்களில் தேவனுடைய ஆசீர்வாதத்திற்காக சும்மா ஜெபிக்கலாம்.

இந்த ராஜ்யங்கள் மேல் நாம் அக்கறை கொள்வதற்கு காரணம் நாம் இந்த மனுக்குலத்தின்மேல் கொண்டுள்ள அக்கறைதான். நாம் அமைதியான பக்தியுள்ள வாழ்க்கையை வாழ விரும்புகிறோம். அது நமக்கு படிக்கவும் ஆராயவும் அதிக சந்தர்ப்பத்தைக் கொடுக்கும். (1 தீமோத்தேயு 2:1,2) தற்போது பூமியிலே சமாதானம் உண்டானால் நாம் சந்தோஷம் அடைகிறோம். நாம் சண்டை போட விரும்பவில்லை. இந்த ஆட்சியாளர்களுக்காக ஜெபிக்க உத்தேசிக்கிறோம். அவர்கள் இருதய கடினமுள்ளவர்கள் என்றோ தீய நோக்கம் உடையவர்கள் என்றோ நாம் நம்பவில்லை. ஒருவேளை அவர்களால் முடிந்த நன்மையை தங்கள் அறிவுக் கேற்றபடி செய்ய முயற்சி செய்கிறார்கள். ஐரோப்பாவில் உள்ள பெரும்பாலான அரசுகள் ஜனங்களை போரில் இழுக்க விரும்பவில்லை.

## தற்கால ஆசீர்வாதங்கள்

நமது நாட்டில் தமது அரசாங்கத்தை வைத்திருப்பவர்கள் கட்டுமான பணியைப் பார்ப்பதற்கும் தீயணைப்பை கவனிப்பதற்கும் சுத்தமான தண்ணீர் வழங்குவதற்கும் தகுந்த அதிகாரிகளை நியமித்து அவைகளை கண்காணித்து வருகிறதை நாம் பார்க்கிறோம். நகரத்தின் பொது நலம், தனிமைப்படுத்த ஏற்பாடு செய்தல் முதலானவைகளை கவனிக்கிறார்கள். பிள்ளைகளின் படிப்பு, மருத்துவமனை முறைமைகள் ஆகியவைகளில் அவர்களது வேலை மகத்தானது!.

நாகரீகமில்லாத காட்டுமிராண்டிகள் காலத்தில் நாம் இருந்திருந்தால் எப்படியிருந்திருக்கும் என்று ஒப்பிட்டுபார்க்கும்போது நமது காலம் ஒரு சந்தோஷமான காலம் என்பதை உணர்வோம். தற்காலத்தில் செய்யப்படுகிற மாபெரும் கட்டடங்கள், பாலங்கள் இன்னும் ஆச்சரியமான முன்னேற்றங்களை பார்க்கும்போது நமக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. ‘‘எப்படிப்பட்ட மனிதன்! நிச்சயமாக தெய்வீக நுட்பத்தின் ஆச்சரியமான படைப்பு!அவனது அபூரண நிலைமையில் இதைக் காட்டிலும் வேறு என்ன செய்ய முடியும்! மேசியாவின் ராஜ்யம் இங்கு இருக்கும்போது அவன் எதை செய்ய முடியாது இருப்பான்? அந்த ராஜ்யத்தில் கீழ்ப்படியாதவர்களுக்கு தண்டனையும் முற்றும் கீழ்ப்படியாமல் நீதியான கொள்கைகளுக்கு இசைவாக வராதவர்கள் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள்’’ என்று நாம் சொல்லுகிறோம்.

எல்லாம் நல்லபடியாக சென்று கொண்டிருப்பதால் நாம் சந்தோஷம் அடைகிறோம். தலைவர்களாக இருப்பவர்களை நாம் திட்டாமல் இருந்து அவர்களை நல்ல நோக்கமுடையவர்களாக நினைக்க வேண்டும். அவர்களுக்காக மனதில் எந்தவித சங்கடமும் இல்லாமல் நாம் நன்கு ஜெபிக்கலாம். இவர்கள் நம்மையும் பார்த்துக் கொண்டு காரியங்களையும் நடப்பிக்கிறதால் நாம் சந்தோஷத்தை உணர்ந்து தேவனுக்கு நன்றி செலுத்தலாம்.

நாம் ஜெபிக்கும் போது, தேவன் தமது ஞானமான திட்டங்களுக்கு இசைந்து வருகிறவர்களை வழிநடத்தி, தமது திட்டத்திற்கு மாறானவைகளை ரத்து செய்வார். ஏனெனில் தற்போது சபையின் ஆசீர்வாதமும் அபிவிருத்தியும் நடந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் புறஜாதியார் காலம் முடியும் வரை இந்த உலகத்தின் அதிபதிக்கு இந்த உலகை ஆளும்படி அனுமதித்திருந்தாலும் தேவன் அளவற்ற அதிகாரத்தைக் கொடுக்கவில்லை. மனிதனின் கடுங்கோபத்துடனான செயல்கள் தேவனுடைய திட்டத்தை பாழ்படுத்தாது. மனுஷனுடைய கோபம் தேவனுடைய மகிமையை விளங்கப் பண்ணும். மிஞ்சும் கோபத்தை அவர் அடக்குவார். (சங்கீதம் 76:10) இதைத்தான் அப்போஸ்தலர் தனது மனதில் கொண்டிருந்தார். வாழ்க்கையின் சகல காரியங்களுக்காகவும் தேவனுடைய வழிகாட்டுதல், வழி நடத்துதலுக்காகவும் ஜெபியுங்கள். ஆளுகிறவர்களுக்காகவும் ஜெபியுங்கள். அதனிமித்தம் சபையின் புனிதத் தன்மை, அமைதி மற்றும் அபிவிருத்தி காக்கப்படும்.

## முறையான ஜெபம்

*நான் அடிக்கடி ஜெபம் பண்ணுகிறேன்:*
*ஆனால் நாம் எப்பொழுதும் ஜெபிக்கிறேனா?*
*எனது மன விருப்பங்களெல்லாம்*
*நான் சொல்லும் வார்த்தைகளோடு செல்கின்றதா?*
*நான் நன்றாக முழுங்கால் படியிட்டு*
*கற்களின் தேவனை ஆராதிக்கலாம்.*
*ஜீவனுள்ள தேவனுக்கு செலுத்துவது*
*வார்த்தைகளாலான ஒரு ஜெபம் மட்டுமே;*
*இருதயத்தோடு இணைந்திராத வார்த்தைகளை*
*கர்த்தர் கேட்பதேயில்லை.*
*உண்மையாக செய்யாமல் உதடுகளினால்*
*செய்யும் ஜெபத்தையும் கர்த்தர் கேட்பதில்லை.*

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ, **C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்,

வெளியிடுபவர்:

சகோ, **R. செல்வராஜ்.** சென்னை வேதமாணவர் சபை.
எண்: 22. முதல் தெரு. ராஜீவ் நகர். காலடிப்பேட்டை. திருவொற்றியூர்.
சென்னை- 600 019, கைபேசி: 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**